விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

TECHNA
Technical Institute
A/L தொழில்நுட்பப் பிரிவு
A/L 2023
புதிய பிரிவுகள் ஆரம்பம்
இலவச Zoom வகுப்புகள்
03.10.2021 காலை 8.00 மணி
தொடர்பு- 077 170 3549

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 17 ஞாயிற்றுக்கிழமை (03.10.2021) தொலைபேசி 222 3373, 222 7329 ஒலி 233

## அரசியல் இலாபங்களுக்காக
# மதவாதங்களை தூண்ட வேண்டாம்
### ஆரியகுளம் தொடர்பில் நாகவிகாராதிபதி



(யாழ்ப்பாணம்)
யாழில் சிலர் தமது அரசியல் தேவைகளுக்காக மதவாதங்களை தூண்டி மக்களை குழப்ப முயற்சிக்கின்றனர். இது உடனடியாக நிறுத் தப்பட வேண்டும் என யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி ஸ்ரீ விமலதேரர் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## சிறைக் கைதிகளை பார்வையிட அனுமதி

(கொழும்பு)
கொரோனாப் பரவல் தீவிரத் தால் இடைநிறுத்தப் 19

## 13 ஆயிரத்தைக் கடந்த கொரோனா மரணம்
### மேலும் 55 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
கொரோனாத் தொற்றுக் குள்ளானவர்களில் மேலும் 19


## மதுபானசாலைகள் இன்று மூடப்படுகின்றன

(கொழும்பு)
இலங்கையில் உள்ள அனைத்து மது பானசாலை 19

வட்டுக்கோட்டையில்
## வாள்களுடன் இளைஞன் கைது

(அராலி)
பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பில் வட்டுக்கோட்டையில் வாள்களுடன் இளை 19

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை பிரித்தானியா தடை செய்ய வேண்டும்
### இராஜதந்திர ரீதியில் கலந்துரையாடல்



(லண்டன்)
இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடை விதிப்பு அதிகார சபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடை செய்வதற்கு பிரித் 19

அராலியில்
## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(அராலி)
அராலியில் விபரீத முடிவெடுத்த 19

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தினுள்
## பேருந்து மோதியதில் வயோதிபப் பெண் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம்மத்திய பேருந்து நிலையத்தில் இ.போ.ச பேருந்தில் மோதுண்டுவயோதிப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இவ்விபத்தில் பலத்த காயமடைந்த குறித்த வயோதிபபெண்ணை 19

இந், சீனாவிலிருந்து
## சேதன பசளைகளை இறக்குமதி செய்ய தீர்மானம்

(கொழும்பு)
பெரும்போக விவசாயத்திற்கு தேவையான சேதன பசளையை இந்தியா, 19

## மன்னாரில் பொலிஸ் காவலில் இருந்த நபர் திடீர் மரணம்
### பொலிஸார் தாக்கியதாக உறவினர்கள் குற்றச்சாட்டு

(மன்னார்)
மன்னார் எருக்கலம்பிட்டி - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் வைத்து மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் நேற்றைய தினம் சனிக்கிழமை காலை திடீர் சுகயீ 19

## கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைக்க சில சக்திகள் முயற்சி
### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(திருகோணமலை)
"முழுமையான அனைத்தும் உள்ளடங்கிய ஓர் அரசமைப்பை இந்த நாடு உருவாக்க முனைவதாகக் கூறப்படுகின்றது.
அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இந்த முக்கிய தருணத்தில் ஒற்றுமையைப் பேணுவது அடிப்படை 19

## இம்மாத இறுதிக்குள் பாடசாலைகள் ஆரம்பம்
### கல்வி அமைச்சர் தினேஷ்

(கொழும்பு)
இம்மாத இறுதிக்குள் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.
மஹரகமவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.
"கட்டம் கட்டமாக பாடசாலைகள் ஆரம் 19

## யாழில் உயிரிழந்த மூவருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் உயிரிழந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
கொக்குவிலைச் சேர்ந்த 85 வயதுடையவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 60 வயதுடைய மற்றும் 19

## பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்தியமைக்க
### ஐரோப்பிய ஒன்றியம் காலஅவகாசம்

21ஆம் பக்கம் பார்க்க

## யாழில் அரச ஊழியர் ஒருவர் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)
இளவாலையில் அரச ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இச்சம்பவத்தில் முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலக திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை 19

# வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் புடைவை காட்சியகத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றனர்.

01. வாடிக்கையாளர் சேவை - (Online)
02. பொதி விநியோகிப்பவர் - Delivery Boy
03. விற்பனையாளர்

**தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு
**077 855 4840**

(C-2746)



# அழகுக்கலை பயிற்சிக்கான வகுப்பு

எமது
**Ashvi Beauty Care & Academy** இல்
பெண்களுக்கான அழகுக்கலை பயிற்சிக்கான புதிய பிரிவு வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.
ஆர்வமுள்ளவர்கள் இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்பாக முற்பதிவினை மேற்கொண்டு
**15%** விலைக் கழிவினை பெற்றுக் கொள்ளுங்கள்.
◇ **Diploma** தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

(8111)

**Ashvi Beauty Care & Academy**
#230A, Ramanathan Road,
Thirunelvely, Jaffna
*(Jaffna University Road)*
T.P. : 077 786 9760


## வடக்கில் 23 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

பிறந்து ஐந்து நாட்களேயான சிசு, ஐந்து வயதுச் சிறுவன் ஒருவர் உட்பட வடக்கில் 23 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 227 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில், யாழ்.மாவட்டத்தில் 14 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 08 பேர், வவுனியாமாவட்டவைத்தியசாலையில் ஒருவரெனத்தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)


Personal Classes
Through Zoom Method
**Auto CAD**
For Engineering Students
Lecturer By:Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD (2D-Drawing&3D-Modeling)
University of Peradeniya
Cert.in Auto CAD (Advance 3D-Modeling)
University of Moratuwa
Civil & Mechanical
Link:077-5116320



# மணமகள் தேவை

76, ரேவதி 20 பாவம். வெளிநாடு சிற்றிசன். சுப்பர் மார்க்கட் உரிமையாளர் மணமகனுக்கு மணமகள் உடன் தேவை.
**துர்க்கா திருமண சேவை**
**077 818 5978**

(8099)



## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
## பதவி வெற்றிடம்

1. உதவி கணக்காளர் - பெண்கள்
2. முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

கல்வித் தகைமை : க.பொ.த உயர்தரம் (வர்த்தகப் பிரிவு) சித்தி.
நேர்முகத் தேர்வு : 07.10.2021 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி.

இல : 183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

செயலாளர்
**021 222 3814**

(C-2736)


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 29.03.1937 மறைவு 02.10.2021

யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் முதல்வர் திரு. **பேரம்பலம் தனபாலசிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
## முத்துப்பிள்ளை பேரம்பலம்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

(C-2742)

# மரண அறிவித்தல்



## கணேசன் கிருசிகன்

( யா/ஹாட்லிக் கல்லூரி 11E ஆங்கில மொழிமூல மாணவன் )

மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கணேசன் கிருசிகன் நேற்று முன்தினம் 01.10.2021 (வெள்ளிக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் கணேசன் - இரஞ்சினி தம்பதிகளின் ஏக புதல்வனும் மகிழினியின் பாசமிகு அண்ணாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மண்டான் பூவரசம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2738)

மண்டான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 24 . 06 . 1950

மறைவு 03 . 09 . 2021

கடந்த 03.09.2021 ஆம் திகதி இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் பாக்கியம் தம்பிராசா (புஷ்பம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 01.10.2021 வெள்ளிக்கிழமை காரை நகர் ஐயனார் தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.10.2021) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

**மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

இல. 44/16. சங்கிலியன் வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

# தமிழ் அரசியல் தலைமைகள் புறக்கணிப்பு

# புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு

## ஜனாதிபதியின் முடிவு வேடிக்கையானது என்கிறார் தயான்



(கொழும்பு)

**புலம்பெயர் தமிழ் அமைப்புகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த தயார் என ஜனாதிபதி கூறினார், ஆனால் இலங்கையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைகளுடன் பேச்சுவார்த்தைக்கு செல்லாத ஒருவர் புலம் பெயர் தமிழ் அமைப்புகளுக்கு அழைப்பு விடுப்பது என்பது வேடிக்கையான விடயமாகும்.**

தேசிய ரீதியில் அனைத்தையும் கையாள்வதாகக்கூறிக் கொண்டு தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்காது யார் எவர் என்று தெரியாத புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவேன் என கூறுவது யதார்த்தத்திற்கு அப்பால் பட்ட காரணியாகும் என இலங்கைக்கான முன்னாள் ரஷ்ய கூட்டமைப்பின் தூதுவர் தயான்ஜெயதிலக தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஜவர் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய குழுவினரின் செயற்பாடுகள், மற்றும் அதனுடன் சார்ந்த சர்வதேச விவகாரங்கள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

மனித உரிமைகளைப்பாதுகாப்பதில், பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குவதில், ஜனநாயகசெயற்பாடுகளைக்கையாள்வதில், ஏன் அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை ? இவ்வாறான காரணங்களைச் சுட்டிக்காட்டி ஜிஎஸ்.பி பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய அடிவிழும்.

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழு தற்போது இலங்கையில் கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையில் மனித உரிமைகள் சரியாக மதிக்கப்படுகின்றதா? ஜனநாயகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதா? ஆட்சிமுறைமையில் சிறுபான்மை மக்கள் சரியாக நடத்தப்படுகின்றனரா? என்பது உள்ளிட்ட மேலும் பல காரணிகளை உள்ளடக்கிஆய்வுகளை மேற்கொள்ளவே ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கையைப் பொறுத்த வரையில் கடந்த காலங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நாடு என்ற ரீதியிலும் பல குற்றச்சாட்டுக்களைச் சுமந்துகொண்டுள்ள நாடு என்ற ரீதியிலும் இலங்கை குறித்து தொலைவில் இருந்து கண்காணிக்காது அவர்களின் குழுவொன்றை அனுப்பி அவர்கள் மூலமாக கண்காணிப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதே இவர்களின் நகர்வாகும்.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்குவது குறித்து இதற்கு முன்னரும் கேள்விகள் எழுந்துள்ளன.

குறிப்பாக யுத்த காலகட்டத்தில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களை அடுத்து இவ்வாறான தடைகள் பிறப்பிக்கப்பட்டன, யுத்த காலத்தில் எம்மால் சகலதையும் செய்ய முடியாது, ஆனால் யுத்தத்திற்கு பின்னர் கண்டிப்பாக சில விடயங்களை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையில் யுத்தத்திற்கு பின்னர் பல்வேறு மாற்றங்களை செய்திருக்க வேண்டும். குறிப்பாக பயங்கரவாதத் தடை சட்டம் போன்றவற்றை நீக்கியிருக்க அல்லது தளர்வுகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆரம்பத்தில் இருந்து நாமும் இதனை வலியுறுத்தி வந்துள்ளோம். எழுத்து மூலமும், பேச்சுவார்த்தைகளின் போதும் இவற்றை நாம் எடுத்துக்கூறினோம் என மேலும் தெரிவித்தார். (4-5)

## ஆரிய குளம் அபிவிருத்தியில்

## எந்த வொரு மதச் சார்பு அடையாளங்களும் உட்புகுத்தப்படவில்லை

### யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

ஆரிய குள அபிவிருத்தியில் எந்தவொரு மதச்சார்பு அடையாளங்களை உட்புகுத்தவில்லை. உட்புகுத்தப்போவதுமில்லை. நான் முதல்வராக இருக்கும் வரை குளத்தில் எந்தவொரு மதமும் பிரதிபலிக்க இடமளிக்கப்படமாட்டாது என யாழ்மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆரிய குளம் மத்தியில் இந்து, பௌத்த பீடம் அமைப்பது தொடர்பில் ஊடகங்களில் வெளிவந்த செய்திதொடர்பாக விளக்கமளிக்கும் முகமாக நேற்று இடம் வெற்ற ஊடகச்சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,ஆரியகுளம் புனரமைப்பு என்னாலே தயாரிக்கப்பட்ட திட்டம். அதில் என்ன உள்ளது என்பதைபகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளோம். ஆரிய குள அபிவிருத்தியில் எந்தவொரு மதச்சார்பு அடையாளங்களை உட்புகுத்தவில்லை.

இது தொடர்பில் மக்கள் அச்சப்பட வேண்டாம். மக்கள் அச்சப்படும் வகையில் போலியான தகவல்களைப் பரப்புவதை தவிர்க்குமாறு ஊடகம் மற்றும் சமூக வலைத்தள எழுத்தாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

விகாராதிபதியால் அனுப்பப்பட்ட கடிதத்தில் புத்தர்சிலை பற்றிஎதுவும் கூறவில்லை. மத நல்லிணக்க மண்டபம் அமைப்பது பற்றியே கூறப்பட்டிருக்கிறது. மத நல்லிணக்கமண்டபம் ஒன்றை அமைக்க கோரிய கடிதம் தொடர்பில் அடுத்த சபை அமர்வுக்கு கொண்டுவருமாறு ஆணையாளருக்குக் கோரினேன். அடுத்த சபையில் இது தொடர்பில் ஆராயப்படும்.

இப்போது ஆரிய குளம் பகுதியில் முதலாம் கட்ட அபிவிருத்திப்பணிகள் இடம்பெறுகிறது. முதலாம் கட்டமாக நடைபாதை மற்றும் குளத்தைச் சுற்றி கம்பி வேலியடைத்தல் என்பன இடம் பெறும்.இரண்டாம்கட்ட பணிகளுக்குரிய நிதிகளை நன்கொடையாளர்கள் தர முன்வந்தால் அபிவிருத்திப்பணிகள் தொடரும் எனத் தெரிவித்தார்.(4-5-18-33)

## நாட்டில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்படலாம்

(கொழும்பு)

நியூஸிலாந்தில் அண்மையில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலானது, இலங்கையில் தான் நடத்தப்பட வாய்ப்புகள் இருந்தன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்ட அவர், உயிர்த்த ஞாயிறு தினத் தீவிரவாத தாக்குதல்கள் பற்றி அரசாங்கம் நடத்திவரும் விசாரணைகள் போதுமானதாக இல்லை என்று முன்வைக்கப்படும் விமர்சனங்களை நிராகரித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்,

"ஞானசார தேரர் குறிப்பிடுவது போல இலங்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றுமொரு தீவிரவாதத் தாக்குதல் மேற்கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் தெரிவித்தார். (4-5)

## நவம்பர் 12 இல்

## 2022 வரவுசெலவுத் திட்டம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி பாராளுமன்றில் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒதுக்கீட்டு சட்ட மூலம் நாளை ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற வாரத்தில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் சமர்பிக்கப்படவுள்ளது.

வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதம் 7 நாட்கள் இடம்பெறவுள்ளதோடு 16 நாட்களுக்கு குழுநிலை விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர வரவுசெலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. (4-5)

## லிட்ரோ சிலிண்டர் விலையை 1200 ரூபாவால் அதிகரிக்குக

(கொழும்பு)

சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை 1,200 ரூபாவினால் அதிகரிக்க வேண்டும் என லிட்ரோ பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பு முழுமையாக இடம்பெறாவிடத்து விலை இடை விந்தியாசத்தை திறைசேரியே பெறுப் பேற்க நேரிடும் என அந்த ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனம் கடந்த 9 மாதங்களாகச் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்காமையினால் நிறுவனத்துக்கு 10, 500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் லிட்ரோ நிறுவனம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதோடு நவம்பர் மாதமளவில் திறைசேரியிலிருந்து நிதி கிடைக்காவிடத்து எரிவாயுவைக்கொண்டு வர முடியாத நிலை ஏற்படும் எனவும் அந்த ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (4-5)

# கொல்கத்தாவை சாய்த்தது பஞ்சாப் புள்ளிப்பட்டியலில் முன்னேற்றம்

ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 45 ஆவது லீக் போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணியும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, வெங்கடேஷ் ஐயர் 67 ஓட்டங்களையும் திரிபத்தி 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பஞ்சாப் அணியின் பந்து வீச்சில், ஹர்ஸ்தீப் சிங் 3 விக்கெட்டுகளையும் ரவிபிஷ்னோய் 2 விக்கெட்டுகளையும் ஷமி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 166 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி 19.3 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.



இதனால் பஞ்சாப் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கே.எல். ராகுல் 67 ஓட்டங்களையும் மாயங் அகர்வால் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொல்கத்தா அணியின் பந்து வீச்சில், வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்டுகளையும் சிவம் மாவி, சுனில் நரேன் மற்றும் வெங்கடேஷ் ஐயர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 49 பந்துகளில் 1 சிக்ஸர் 9 பவுண்றிகள் அடங்களாக 67 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட கே.எல்.ராகுல் தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

## தெற்காசிய கால்பந்தாட்டப் போட்டி இலங்கை தோல்வி

மாலைத்தீவுகளில் நேற்று முன்தினம் ஆரம்பமான 13 ஆவது தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளன வல்லவர் போட்டித் தொடரின் முதற் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்த்தாடி இலங்கை அணி 0 : 1 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியது.

போட்டியின் ஆரம்பம் முதலே இலங்கை வீரர்கள் தடுத்தாடும் நோக்கிலேயே விளையாடியதுடன், பங்களாதேஷ் அணி வீரர்கள் சிறப்பாக கோல் அடிக்கும் முனைப்பில் விளையாடியதை அவதானிக்க முடிந்தது.

போட்டியின் முதல் பாதியில் இரண்டு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. பங்களாதேஷ் அணி வீரர்களால் கோல் அடிப்பதற்கு எடுத்த முயற்சிகளைத் தடுப்பாளர்கள் சாதுரியமாக தடுத்தனர்.

குறிப்பாக டக்ஸன் பியுஸ்லஸ் சிறப்பாக தடுத்தார். அதேபோல் அணித்தலைவரும் கோல் காப்பாளருமான சுஜான் பெரேராவும் எதிரணி வீரர்கள் கோல் வலை நோக்கி அடித்த பந்துகளை இலாவகமாக தடுத்தார்.

எவ்வாறாயினும், போட்டி சூடு பிடித்து நடைபெற்று இருந்தபோது, போட்டியின் 56 ஆவது நிமிடத்தில் பெனால்டி பெட்டிக்குள் டக்ஸன் பந்தை கையால் தட்டிவிட்டதன் காரணமாக பங்களாதேஷ் அணிக்கு தண்ட உதை (பெனால்டி) வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதனை சதாகமாக பயன்படுத்திக் கொண்ட பங்களாதேஷ் அணியின் பார்மன் தோபு கோலாக்கி தமது அணியை 1 : 0 என்ற கோல் கணக்கில் முன்னிலைக்கு கொண்டுச் சென்றார்.

போட்டியின் நிறைவில் பங்களாதேஷ் அணி 1 : 0 என்ற கணக்கில் வென்று இப்போட்டித் தொடரில் தனது முதல் வெற்றியை பதிவு செய்தது. (4-6)

## கால்பந்தாட்டப் போட்டியில் ரசிகர்களுக்கிடையில் மோதல்



ஐரோப்பிய லீக் கால்பந்தாட்டத் தொடரின் குழு "ஈ" க்கான லீக் போட்டியில் மார்செல்லி மற்றும் கெலட்டசெரி ஆகிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான போட்டியின்போது இரு அணிகளின் இரசிகர்களின் சண்டையால் போட்டியை வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிக்க நேர்ந்ததாக வெளிநாட்டு செய்திச் சேவைகள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ் நாட்டின் மார்செல்லி நகரிலுள்ள வென்டோர் மிலுள்ள கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டி ஆரம்பமானது 2500இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் மத்தியில் இரண்டு அணி இரசிகர்களினதும் பெரும் ஆரவாரத்துக்க மத்தியில் இப்போட்டி ஆரம்பமானது.

இப்போட்டி நடந்து கொண்டிருக்கும்போது இரண்டு இரசிகர்களும் முரண்பட்டு சண்டை பிடித்ததால், போட்டி 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பமானது.

சிறிது நேரம் கழித்து இரண்டு அணி ஆதரவாளர்களும் பட்டாசுகள் மற்றும் நெருப்பை பற்ற வைத்து பார்வையாளர் அரங்கிலும், மைதானத்துக்குள்ளும் வீசியதால் அரங்கம் மற்றும் மைதானத்தில் நெருப்பும், புகை மூட்டமும் காணப்பட்டது.

இதேவேளை, இரண்டு அணி வீரர்களும் சண்டையிட்டுக் கொண்டர். மேலும், இரு அணி இரசிகர்களும் ஒருவரையொருவர் வம்புக்கு இழுத்து சண்டையிட்டுக் கொண்டிருந்ததால் போட்டி தொடர்ந்து நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டது.

எனினும், இரண்டு தரப்பினரும் தத்தமது இரசிகர்களை சமாதானப்படுத்த முயற்சி செய்த போதும், அது பலனளிக்காததால் போட்டி மத்தியஸ்தர் பவெல் ரெக்ஸ்கோவ்ஸ்கி இப்போட்டியை வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடித்தார். (4-6)


## எங்களது திட்டத்தை பந்து வீச்சாளர்கள் சரியாகச் செயற்படுத்தினர் - டோனி

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சார்ஜாவில் நடந்த 44ஆவது லீக் ஆட்டத்தில் ஐதராபாத் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் தோற்கடித்தது.

வெற்றி குறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கப்டன் டோனி கூறியதாவது,

கடந்த வருடம் போட்டி முடிந்த பிறகு பரிசு அளிப்பு விழாவில் நான் பேசும்போது, நாங்கள் வலுவாக திரும்பி வர வேண்டும் என்று கூறினேன். அதிலிருந்து நீங்கள் கற்றுகொண்டிருக்க வேண்டும். முதல் கட்ட ஐ.பி.எல். போட்டியில் கூட அதை நாங்கள் செய்தோம்.

ஒவ்வொரு பாராட்டும் வீரர்கள் மற்றும் அணி ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த ஆடுகளம், பந்து திரும்பும் வகையில் இல்லை. ஆனால் நல்ல பவுன்ஸ் இருந்தது. பந்து



வீச்சாளர்கள், வேகத்தையும், சரியான அளவிலும் வீசினர். இதை தான் ஆட்டம் தொடங்குவதற்கு முன்பு கூறினேன்.

அந்த திட்டத்தைச் சரியாக செயல்படுத்தினர். ஆரம்பத்தில் இருந்தே இரசிகர்கள் நன்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். நாங்கள் ரசிகர்களை பற்றி பெருமைப்படுகிறோம் என்று சென்னை சூப்பர் கிங்ஸ் சார்பாக நான் பெருமையுடன் சொல்ல முடியும் என டோனி தெரிவித்தார்.(4-5)


இன்றைய போட்டி vivo IPL

3.30Pm RCB vs PBKS

7.30Pm KKR vs SRH

# இராசிபலன்

03.10.2021
புரட்டாதி 17, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முன்னிரவு 8.42 மணிவரை
மகம் பின்னிரவு 2.42 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவோணம்,
சந்நியஸ்த மஹாளயம். வளவன்


மேஷம்

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாடு மகத்துவம் தரும்.


ரிஷபம்

பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


கடகம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்


நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.


கன்னி

அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள், சயனச் சுக குறைவான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


துலாம்

எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் கிடைக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.


தனுசு

குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், போசன சுகமுண்டு.


மகரம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.


கும்பம்

மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


மீனம்

கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் ஆர்வம் கூடும், கௌரவமான நாள்.

**பொறுமை இல்லாதவனிடம் ஞானம்- இருப்பதில்லை**

# மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கும் மகிந்தவின் புதல்வர் ரோகித்த



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கடைசிப் புதல்வராகிய ரோகித்த ராஜபக்ஷ வருகின்ற மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக தென்னிலங்கை சிங்கள ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது.

அந்த வகையில் 2022ஆம் ஆண்டு ஏப்ரலுக்கு முன்னதாக மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் வடமேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக ரோகித்த ராஜபக்ஷ களமிறங்குவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே குருநாகல் மாவட்டத்தின் பிரபல்யமான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவும் வடமேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. (4-5)

# இத்தாலி-மிலான் நகரசபை தேர்தலில் போட்டியிடும் இலங்கைப் பெண்

(ரோம்)

இத்தாலி - மிலான் நகர சபைத் தேர்தலில் இலங்கைப் பெண்ணொருவர் போட்டியிடுகிறார்.

குறித்த பெண் சுமார் 30 வருடங்களாக இத்தாலியில் வசித்து வருவதுடன் பல சமூக பணிகளில் ஈடுபடும் இவருக்கு அதிக வாக்குகள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தேர்தல் தொடர்பாக தம்மிகா சந்திரசேகர, மிலான் பகுதியில் உள்ள பெரும்பாலான இலங்கையர்கள் எனக்கு வாக்களிப்பார்கள் என எதிர்பாப்பதாக நம்பிக்கைவெளியிட்டுள்ளார்.(4-5)

# போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் நாளை முதல் தமது சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

அதற்கமைய கையடக்க தொலைபேசியிலிருந்து 225 என்ற எண்ணுக்கும் நிலையான தொலைபேசியிலிருந்து 1225 என்ற எண்ணுக்கும் அழைத்து முன்பதிவு செய்து கொள்ள முடியும்.

அதேவேளை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள www.ntmi.lk என்ற தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் இணையத்தள முகவரிக்குப் பிரவேசிக்க முடியும்.(4-5)

# புதிய அரசியலமைப்புச் சட்டம்; கால அவகாசம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட் டத்தை உருவாக்க அரசியல மைப்புச் சட்டவாக்க சபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ மேலும் மூன்று மாத காலத்தை வழங்கியுள்ளார்.

செப்டெம்பர் 15 ஆம் திகதி இற்குள் இதை நிறைவு செய்யு மாறு குறித்த பணிக்காக நிய மிக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டவாக்கச் சபைக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

எனினும் அந்த பணிகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதால், மேலும்மூன்று மாதகாலம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சட்டவாக்க சபை, கொழும்பு பண்டார நாயக்க மாநா ட்டு மண் டபத்தில் வாரத்தில் சில முறை கூடி இந்த விடயம் தொடர் பாக முன்வைக்கப்படும் யோசனைகளை ஆராய்ந்து வருகிறது. (4-5)

**ஜெயக்குமார் திருமண சேவை**

வெளிநாட்டிலுள்ள 1980-1993 வரையுள்ள மணமகன்மாருக்கு மணமகள்மார் தேவை. சூரிய+செவ் கனடா மணமகளுக்கு படித்த மணமகன், 1989 கனடா மணமகனுக்கு மணமகள் தேவை. இலங்கையிலுள்ள மணமகளுக்கு மணமகன் தேவை.

**தொடர்புகளுக்கு**
German-**004917643399372**
WhatsApp, Viber
**0094764752219,**
**0094762049298**
.... **0774196292**

**UNOPS**
**VACANCY ANNOUNCEMENTS**

Post Title : Programme Management Associate
Contract Type : Individual Contractor Agreement (ICA), Local, (LICA 6)
Duty Stations : Batticaloa / Mullaitivu, Sri Lanka
Closing date : 13 October 2021

Application Details: For further information and to apply, please visit UNOPS Jobs via (https://jobs.unops.org/Pages/ViewVacancy/VADetails.aspx?id=22648&media=print)

If you need any further information please contact us via 0112665146/ prabuddhik@unops.org

Qualified female candidates are strongly encouraged to apply.

Applications are received online through the UNOPS Jobs website only.

## சிறுவர்களின் உரிமைகளிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒழுக்கமான சிறுவர்களை உருவாக்க வேண்டும்

### யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன்

(குப்பிழான்)

"அனைத்திற்கும் முன்னுரிமை சிறார்கள்" எனும் தொனிப்பொருளுக்கு இணங்க சிறுவர்களின் உரிமைகளிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒழுக்கமான சிறுவர்களை உருவாக்க வேண்டும். அத்துடன் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்துச் செயற்படுதல் வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வலியுறுத்தியுள்ளார்.



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு "அனைத்திற்கும் முன்னுரிமை சிறார்கள்" எனும் தொனிப்பொருளில் பலாமரக்கன்றுகளை நாட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம், நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியம் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் எனப் போதைப்பொருள் பாவனை, பெற்றோரை இழந்த சிறுவர்களின் நிலைப்பாடு, சிறுவர்களின் தற்கொலைச் சம்பவங்கள், போருக்குப் பிந்திய சிறுவர்களின் உள நிலை பற்றியும் இவற்றிலிருந்து சிறுவர்களை மீட்பதற்கு உளவள ஆலோசனைகள் வழங்குதல் வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (7-5-18)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி பெரியநாயகிஉடன் உறை சிவக்கொழுந்தீஸ்வரர் சிவன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ ச.து.நந்தகுமாரா சிவச்சாரியார், பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம் பெறும். (7-5)

## அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் 04 நிகழ்வு இம் மாதம் 04,05, 06,07 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (7-5)

## மின்மயான விடயத்தில் தென்மராட்சி பிரதேச செயலகமும் இணைய வேண்டும்

### சாவ.நகரசபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் மின் மயானம் அமைக்கும் விடயத்தில் தென்மராட்சி பிரதேச செயலகமும் முயற்சி எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் நாட்டு நிலைமையை கருத்திற்கொண்டு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின் மயானம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு நகரசபை அதற்கான நிதிமூலத்தை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின் மயானம் அமைக்கும் பட்சத்தில் அதனால் பயனடையப்போவது ஒட்டுமொத்த தென்மராட்சி பிரதேசத்தவர்களுமே தவிர நகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மாத்திரம் அல்ல.

எனவே தென்மராட்சி பிரதேச செயலகமும் சாவகச்சேரியில் மின் மயானம் அமைக்கும் விடயத்தில் முயற்சிஎடுக்க வேண்டும். இதனூடாக கொரோனா நோய்த் தாக்கம் காரணமாக உயிரிழப்பவர்களது சடலங்கள் வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தல், வைத்தியசாலையில் தேக்கிவைத்தல் உள்ளிட்ட சிரமங்களை தவிர்க்க முடியும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (7-5-30)



மகாத்மா காந்தியின் 153 ஆவது பிறந்த நாள் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. (படம்- சிவசாந்தன்,ரவிசாந்)

## பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே பைஸர் தடுப்பூசி

(சாவகச்சேரி)

தற்போது 12-19 வயதுப் பிரிவுக்குள் உள்ள விசேட தேவை உடைய பிள்ளைகளுக்கான பைசர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வரும் நிலையில் நேற்றைய தினம் சனிக்கிழமை சாவகச்சேரிஆதார வைத்தியசாலைக்குத் தடுப்பூசி பெற வந்த சிலர் திருப்பிஅனுப்பப்பட்டனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை அத்தியட்சகரை தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த தினத்தில் தடுப்பூசி பெற வந்த பலரும் 12-19 வயதுப் பிரிவுக்குள் உட்பட்டிருக்கவில்லை எனவும் அதேவேளையில் தடுப்பூசி செலுத்தும் வகையில் அவர்கள் விசேட தேவை உடையவர்கள் என்ற வரையறைக்குள் உள்ளடக்க முடியாதவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களங்கள் கூட விசேட தேவை உடையவர் என்பதற்கான உரிய மருத்துவச் சான்றிதழ்கள் இல்லாதவர்களையும் தடுப்பூசி பெற வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆறு விசேட தேவை உடைய உரிய வயதுப்பிரிவினர் ஒரே நேரத்தில் வருகை தரும் போதே தடுப்பூசி செலுத்தக்கூடிய நிலைமை காணப்படுவதால் அதற்கு குறைவானோர் தடுப்பூசி பெற வரும் போது உடனடியாகத் தடுப்பூசியை செலுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-5-30)



யாழ் கிறிஸ்தவத் திருச்சபைகளின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நீங்க வேண்டி விசேட நற்கருணை ஆராதனைத் திருப்பலி நேற்று முன்தினம் வரலாற்று சிறப்பு மிக்க யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ்.மறைமாவட்ட பங்கு குருமுதல்வர் கலாநிதி ஆ.ஜெபரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.இதில் யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நற்கருணை ஆராதனை நிகழ்த்தினார். இதில் யாழ்.மறைமாவட்ட கிறிஸ்தவ திருச்சபைகளின்பங்குதந்தையினர்,இராணுவத்தினர்கள்,பலரும்கலந்துகொண்டர். (படம் : சிவசாந்தன்)

## 10 கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது

(மன்னார்)

மன்னார்-மதவாச்சிபிரதான வீதி முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 10 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருட்களுடன் இருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, லொறியை சோதனை செய்த போது மறைத்து வைக்கப்பட்ட 10 பொதிகளை கொண்ட 10 கிலோ ஐஸ் போதைப் பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர். மேலும் குறித்த லொறியின் சாரதி மற்றும் ஒருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வவுனியாவைச் சேர்ந்த 30 மற்றும் 42 வயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. முருங்கன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட முருங்கன் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-5-285)

# பெற்றோலியத்துறையை வலுப்படுத்த இலங்கை-இந்தியா கூட்டு முயற்சி



(டில்லி)

பெற்றோலியத் துறையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்குமான வழிகள் குறித்து இலங்கை - இந்திய இரு தரப்புக்களும் அவதானம் செலுத்தியுள்ளன.

இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் இந்திய பெற்றோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, பெற்றோலியத் துறையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும், விரிவாக்குவதற்குமான வழிகள் உட்பட பல விடயங்கள் குறித்து அமைச்சரும் உயர்ஸ்தானிகரும் கலந்துரையாடினர்.

இதன் போது உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கொள்கை வரைபு கூட்டுத்திட்டத்தை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (4-5)


## உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும்
நிகழ்வுகள் மற்றும் வர்த்தக
விளம்பரங்களை எவரின்
உதவியுமின்றி உங்கள் வலம்புரியில்
நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**


தொலைபேசி:
076 097 3127
021 221 7603

Viber: 076 636 3378

E.mail:
valampurii@yahoo.com


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## செல்லத்துரை நடேசபிள்ளை



தோற்றம் 21.03.1936
மறைவு: 26.09.2019

அப்பா எங்கள் தெய்வமே!
எங்களை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
பாசமிகு தலைவனாய்
நேசமிகு தந்தையாய்
அறம், நெறி, பண்புக்கு
பாத்திரமானவனாய்
இம்மையிலும் மறுமையிலும்
இனியவனாய்
தருமத்தின் உபகாரியாய்
எங்கள் குடும்பத்தின் அகல் விளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆன்மா இனிச்சபுளியடியானின்
பாதத்தில் சாந்தியடைய
கரம்கூப்பி சிரம்தாழ்த்தி
வணங்குகின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(8033)

நடேசபிள்ளை
குடும்பத்தினர்

## பாரதம் // வெளிநாடு

# பொருளாதார திட்டங்களினூடாக கடன் வழங்கி 42 உலக நாடுகளை அடிமைப்படுத்திய சீனா

## ஆய்வறிக்கையில் தகவல்

(வோஷிங்டன்)

**கடனுக்கு மேல் கடன் வழங்கி42 நாடுகளை, தன்னிடம் இருந்து மீறி செல்ல முடியாத வகையில் சீனா பெரும் கடன் சுமையில் சிக்க வைத்துள்ளது. இந்த நாடுகளின் கட்டமைப்பிற்கு உதவுவதாக கூறி, அவற்றை கடனாளியாக்குவதே சீனா குறிக்கோளாக கொண்டுள்ளது.**

அமெரிக்காவில் உள்ள வில்லியம் அண்ட் மேரி கல்லூரி, 'உதவி புள்ளி விவரம்: பொருளாதாரப்பாதை திட்ட செலவு' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள ஆய்வறிக் கையில் கூறப்பட்டுள்ளதாவது, சீனா தனது எல்லையை மறைமுகமாக விரிவுபடுத்தும்நோக்கத்தில் பொருளாதார பாதை திட்டத்தை செயற்படுத்திவருகிறது. இதன் மூலம், பல் வேறு நாடுகளின் உட்கட்டமை ப்பை மேம்படுத்த உதவி செய்வதாக கூறி, பல கடன்களை மட்டுமே வழங்கி வருகிறது.

கடனுக்கு மேல் கடன் வழங்கி42 நாடுகளை, தன்னிடம் இருந்து மீறிச் செல்ல முடியாத வகையில் சீனா பெரும் கடன் சுமையில் சிக்க வைத்துள்ளது. இந்த நாடுகளின் கட்டமைப்பிற்கு உதவுவதாக கூறி, அவற்றை கடனாளியாக்குவதே சீனாக் குறிக்கோளாக கொண்டுள்ளது.இந்த நாடுகள் சீனாவுக்கு வழங்க வேண்டிய கடன், அந்நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட 10 சதவீதம் அதிகமாக இருக்கிறது. மேலும், கடன் வாங்கிய நாடுகளிடம் இருந்து கடனுக்கும் அதிகமான பிணையை வாங்கி இருப்பதன் மூலம், சீனா பலத்த கடன் பாதுகாப்பை உருவாக்கியுள்ளது.

மேலும், தனது நாட்டில் போதிய அளவு இல்லாத வளங்களை சரிக்கட்டவும் முதலீட்டு வருமானமாக டொலர், யூரோக்களை பெற்று அந்நிய செலாவணி கையிருப்பை உயர்த்துவதன் மூலம், ஊழலில் சிக்கித்தவிக்கும் உலக பணக்கார நாடுகளுக்கு நாணய மதிப்பிலான கடன் வழங்கும் ஏற்பாட்டை செய்து வருகிறது என அதில் கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை, பாகிஸ்தான் போன்றவை சீனாவிடம் அதிகளவில் கடன் வாங்கி சிக்கி உள்ள நாடுகளில் இடம் பெற்றுள்ளன. 2000 ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை மிக அதிகளவில் கடன் பெற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா23 ஆவது இடத்தில் உள்ளது. (7-5)



நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 94ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் உள்ள அவரது மணி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இது தொடர்பாக அவருடைய சுட்டுரையில்,"நடிப்பின் உச்சம்.. நட்பின்இலக்கணம்.. நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள். அனல் பறக்கும் புரட்சிகர பராசக்தி வசனத்தை சிம்மக் குரலில் கர்ஜித்து தலைவர் கலைஞருடன் நட்பு பாராட்டிய குணசேகரன் அவர் கலை உலகம் உள்ளவரை அவரது புகழ் போற்றப்படும்."என பதிவிட்டிருக்கிறார்.

# 45 விநாடிகளில் 15 கட்டடங்கள் குண்டு வைத்து தரைமட்டமாக்கப்பட்டன

(பீஜிங்)

சீனாவின் யுனான் குன்மிங் பகுதியில் கடந்த 7 ஆண்டுகளாக முழுமையாக கட்டி முடிக்கப்படாமல் இருந்த 15 குடியிருப்பு கட்டடங்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் குண்டுவைத்து தகர்த்தப்பட்டுள்ளன.

154 மில்லியன் டொலர் பெறுமதியான கட்டடங்கள் 45 விநாடிகளில் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன.

4.6 டொன் வெடிப்பொருட்களைக்கட்டடத்தின்85 ஆயிரம் இடங்களில் வைத்து வெடிக்கச் செய்து அழிக்கப்பட்டுள்ளன.



இந்த சம்பவத்தின் போது குறித்த பிரதேசத்தில் இருந்து இரண்டாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

இவ்வாறு சீனாவில் ஒரே நேரத்தில் பல கட்டடங்கள் குண்டு வைத்து தரை மட்டமாக்கப்பட்டமை இதுவே முதல் சந்தர்ப்பமாகும். (7-5)

# ஈகுவடார் சிறை வன்முறையைத் தொடர்ந்து 2 ஆயிரம் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு



(குயிட்டோ)

ஈகுவடாரின் குயாகுவில் சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரு தரப்பு கைதிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இந்த கலவரத்தில் 118 கைதிகள் உயிரிழந்தனர். மேலும் 79 கைதிகள் படுகாயமடைந்தனர்.ஈகுவடாரில் உள்ள சிறைச்சாலைகளில் சுமார் 39 ஆயிரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அதிக எண்ணிக்கையிலான கைதிகள் சிறைகளில் அடைக்கப்பட்டதாலும், கைதிகளை கண்காணிக்க போதிய அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடாததும் இதுபோன்ற மோதல்கள் வன்முறையில் முடியக் காரணமாகியுள்ளது.

இந்நிலையில், சிறையில் உள்ள 2 ஆயிரம் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய ஈகுவடார் அரசு முடிவு செய்துள்ளது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளில் பெண்கள், வயதானோர், மாற்றுத்திறனாளிகள், உடல்நலம் பாதிக்கப்பட்டோரில் 2 ஆயிரம் பேரை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. சிறையில் உள்ள கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் பாதுகாப்பை அதிகரிந்து, மோதல்களை தவிர்க்கலாம் என்ற நோக்கத்தோடு அரசு இந்த நடவடிக்கையை எடுத்து வருகிறது. (7-5)

# சமூக வலைத்தள பரபரப்புக்காக 'குக்கரை' மணந்த இளைஞர்


(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவை சேர்ந்த இளைஞர், "குக்கரை" திருமணம் செய்து, அதை நான்கு நாட்களில் விவாகரத்தும் செய்து, சமூக வலைதளங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.இந்தோனேஷியாவை சேர்ந்த கொய்ருல் அனாம் புது மாப்பிள்ளை போல் ஆடை அணிந்து அவரின் அருகே, சாதம் சமைக்கும் வெள்ளை நிற குக்கருக்கு புது மணப் பெண்ணைப் போல அலங்காரம் செய்திருந்தார்.

குக்கருக்கு முத்தம் கொடுப்பதை போலவும், அதை தன் அருகே வைத்து திருமண ஆவணங்களில் கையெழுத்திடுவது போலவும் பல்வேறு புகைப்படங்களை வெளியிட்டார்."என் வீட்டு குக்கர், அழகாகவும், தன் உத்தரவுகளுக்கு கீழ்படிவதோடு சிறப்பாகவும் சமைப்பதால் அதை திருமணம் செய்து கொள்கிறேன்" எனப், பதிவு வெளியிட்டார்.



இந் நிலையில் நான்கு நாட்களுக்கு பின், குக்கரை விவாகரத்து செய்துவிட்டதாக மற்றொரு பதிவை வெளியிட்டார். அதில், "அதற்கு சாதத்தை தவிர வேறு எதுவும் சமைக்க தெரியவில்லை" எனக், கூறி இருந்தார். (7-5)








**கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் வியாசரே?**

**சுதன் — குப்பிழான்**

**சரணடைந்தவர்கள் எப்படி இறந்தார்கள் எனும் காரணம் தெரியாமல் எப்படி மரணச் சான்றிதழை வாங்க முடியும்?**

அதெல்லாம் கேட்கக்கூடாது. எங்களிடம் தந்த உங்கள் பிள்ளைகள் இப்போது உயிருடன் இல்லை அவ்வளவுதான்.

பேசாமல் மரணச் சான்றிதழை வாங்கிச் சூட்கேசுக்குள்ள வச்சிட்டு கம்மென்று இருக்க வேண்டும். ஹரித..?

அப்படியெண்டால் நாங்கள் அழக்கூட முடியாதா ஐயா.

அழுங்க. அது உங்களுக்கே உரித்தானது. நாங்கள் அதைப் பார்த்து சிரிப்பம். அது எங்களுக்கே உரித்தானது. ஹரித?

**தெய்வீக் — பளை**

**வடிவேலுவிற்கு நடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு விட்டதே. இனி அவரைத் திரையில் பார்க்கலாம் தானே?**

வடிவேலுவிற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்ட அறிவிப்பு வந்ததும் மகிழ்வடைந்தவர்களில் நானும் ஒருவன்.

மனித குலத்தின் பெரும்பாலானவர்களுக்குச் சிரிக்கக் கற்றுக்கொடுத்த உன்னத கலைஞன் வடிவேலு.

அவரின் இடைவெளி தமிழ் சினிமாவின் இருண்டகாலம் என்றே கூறலாம்.

அதன்பின் எத்தனை நகைச்சுவை நடிகர்கள் வந்துவிட்டார்கள். ஆனாலும் வடிவேலுவின் சிம்மாசனம் அப்படியே இருக்கிறது. அதில் அவர் மட்டுமே அமரமுடியும்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஊரடங்கு முடிந்து விட்டது. அடங்கிய கொரோனா மீண்டும் தலைதூக்குமா?**

எம்மவர்களுக்குத்தான் கொஞ்சம்கூட அடிப்படை அறிவு ஏதும் இல்லையே.

நேற்றையதினம் மருதனார்மடம் சந்தை வாயிலில் கண்ட காட்சி ஒன்று.

மரக்கறிகளை வாங்கிக்கொண்டு வெளியேறிய இளம்பெண் ஒருவர் முகக் கவசத்தை நாடிக்குப் போட்டபடி இரு கைகளாலும் மாறிமாறி மூக்கைச் சொறிஞ்சுகொண்டு யாருடனோ தொலைபேசியில் சிரித்துப் பேசியபடி செல்கிறார்.

அடக்கொடுமையே உங்களை எத்தனை பெரியார் வந்தாலும் திருத்த முடியாது என்ற எண்ணம் என்னுள் இழையோடியது.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தாரு — வதிரி**

**மனதை ரணமாக்கி சந்தோசப்படும் மனிதர் இப்போதும் இருக்கிறார்கள் தானே வியாசரே?**

என்ன செய்ய, இப்போது நல்லதிற்கும் நல்லவர்க்கும் காலம் இல்லைதானே. தமது தவறுகளை மறைத்து போலி வேடம் போட்டு மற்றவர்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களின் வேடமுகம் தெரிய வந்ததும் அதை மறைக்க புதிய புதிய பிரச்சினைகளைக் கிளப்பித் தம்மை நியாயப்படுத்திக் கொண்டே இருப்பவர்கள் இப்பேற்பட்டவர்கள்.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. மனிதர்களை ஏமாற்ற முடியும். இறைவனை ஏமாற்றி விட முடியாது. இவர்களுக்கு நரகம் நிச்சயம்.

**சானு — மீசாலை**

**வியாசரே உங்களுக்குக் கொரோனா வந்ததா?**

தம்பி இப்ப இருக்கிற நிலையில உனக்கு எனக்கெண்டு இல்லை எல்லோருக்கும் கொரோனா தான்.

அண்மையில் ஒரு வைத்தியருடன் உரையாடும் போது அவர் கூறினார்.

உடல் ஆரோக்கியமான நீங்கள் எங்காவது வாங்கிக்கொண்டு வந்து வீட்டில் இருக்கும் முதியவர்களுக்கு கொடுத்துவிடுவீர்கள். அது அவர்களை இறக்கும் நிலைக்குக் கொண்டு செல்கிறது என்று. உடல் ஆரோக்கியம் என்பதை கவனத்தில் கொள்வோம். கொரோனாவில் இருந்து பாதுகாப்பாய் இருப்போம்.

**வடிவேலுவிற்கு நடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு விட்டதே. இனி அவரைத் திரையில் பார்க்கலாம் தானே?**

**சிவன் — வடமராட்சி**

**கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் வியாசரே?**

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை என்பது அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

அதைவிடுத்து ஒவ்வொரு இடத்திற்கு ஒவ்வொரு மாதிரி என்ற நிலையைக் கைவிட்டு சமூகத்திலும் சரி, அரச திணைக்களங்களிலும் சரி, வைத்தியசாலைகளிலும் சரி ஒரே மாதிரியான நடவடிக்கை இருக்கவேண்டும்.

வைத்தியசாலைகளில் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு இருக்கிறதா என்றால் சிரிப்புத்தான் வரும். அடக்கடவுளே கொரோனா நோயாளி இருந்த கட்டிலுக்கு மருந்தடிக்கலாம். பக்கத்துக் கட்டிலில் இருந்தவரின் மூக்கிற்குள் மருந்தடிக்க முடியுமா என்ன?

**தர்சன் — மானிப்பாய்**

**மன்னிப்பு என்பது எப்பேற்பட்டது வியாசரே?**

மன்னிப்பைப் போன்ற உன்னதமான விடயம் இந்த உலகில் இல்லை என்பதே உண்மையானது.

ஒருவர் செய்யும் தவறுக்கு தண்டனை வழங்குவதிலும் மன்னிப்பளித்தால் அவர் மீண்டும் தவறைச் செய்யாமல் திருந்தி வாழும் நிலையினை ஏற்படுத்தி விடலாம்.

ஆனால் இப்போதெல்லாம் தவறு செய்தவர்கள் தமது தவறை மற்றவர்மீது சுமத்திவிட்டு அதற்கு மன்னிப்பு வழங்கி, தாம் ஏதோ பரமபிதா என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுதான் பரிதாபத்தின் உச்சம்.

**பிறேமினி — யாழ்ப்பாணம்**

**வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என கனவு காண்பது தவறா வியாசரே?**

கனவு காணச்சொன்னார் அப்துல் கலாம். ஆனால் உன் கனவு நீ விழித்திருக்கையில் வரவேண்டும் என்றும் சொன்னார் அவர்.


எமது வாழ்வைப் பற்றிய கனவு எம்மிடம் இருப்பது மிக முக்கியமானது. அந்தக்கனவு எம் மனதில் இலட்சியமாக மாறவேண்டும். அந்த இலட்சியத்திற்காக தினம் தினம் உழைக்கவேண்டும்.

வெறுமனே கனவு கண்டுவிட்டு முயற்சி இல்லாமல் இருந்தால் பயன் ஏதும் வந்துவிடாது? உன் கனவு பலிக்க அனுதினம் முயற்சி செய்து கொண்டே இரு.



# சிறுவர் அரங்கம்

## நட்புக்குத் துரோகம் செய்யக்கூடாது



அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக் கொண்டது.

நரி, சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத்திற்குச் சென்றது.

"நண்பனே! இரை தேடச் செல்லலாமா?" என, கழுதையை அழைத்துக்கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து நிறுத்தியது நரி.

சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம், நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது.

நரி பதறிப் போய், "மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் காண்பிக்க வந்தேன்.

இப்போது என்னையே கொல்ல வந்து விட்டீர்களே!" என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

"நெருக்கமான நண்பனையே காட்டிக்கொடுக்கத் தயங்காத உன்னை நம்ப முடியாது.

நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம்.

ஆகவே உன்னை உயிருடன் விட்டு வைக்கக் கூடாது," என்று கூறிக் கொண்டே சிங்கம், நரியையும் கொன்று வீழ்த்தியது. இதற்குத்தான் கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமைதான் ஏற்படும்.

(முற்றும்)

# மகாபாரதம்




பின் அந்தணரிடம் விடைபெற்றுச்சென்ற கௌதமன் வழியில், கடல் யாத்திரை செய்யும் வணிகரை சந்தித்தான்.

அப்போது மத யானையால் வணிகக் கூட்டம் தாக்கப்பட்டது. அக் கௌதமன் வட திசை நோக்கிப் பயந்தபடியே ஓடினான். யாருடைய உதவியும் இல்லாததால் காட்டில் தனியாகச் சென்றான்.

மரங்கள் நிறைந்த காடு அழகு மிக்கதாய் இருந்தது. பறவைகள் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன.

அந்த இனிய ஒலிகளைக் கேட்டுக்கொண்டே இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருந்தான்.

மணல் பொன் போல் காட்சி அளித்தது. ஓரிடத்தில் பெரிய ஆலமரம் கண்ணில் பட்டது. குடை கவிழ்த்தது போல் அதன் கிளைகள் தாழ்ந்து நிழல் கொடுத்தன.

மகிழ்ச்சியுடன் கௌதமன் அம்மர நிழலில் அமர்ந்தான். மிகவும் களைப்புடன் இருந்தவன் சற்று கண்ணயர்ந்தான்.

சூரியன் மறைய, அப்போது பிரம்மலோகத்தில் இருந்து ஒரு பெரிய கொக்கு அங்கு வந்தடைந்தது.

அது பிரம்மாவிற்கு நண்பன். காசியபருக்குப் புதல்வன். கொக்குகளுக்கு அரசன். அதன் பெயர் நாடீஜங்கன்.

அந்த கொக்கின் இருப்பிடம் அந்த ஆலமரம். அது தேவ கன்னியரிடம் பிறந்ததால் அழகுடன் திகழ்ந்தது.

அதன் உடலிலிருந்து எங்கும் ஒளி வீசியது. அந்தக் கொக்கு ராஜ தர்மா என்னும் பெயரையும் பெற்றிருந்தது.

கௌதமன், ஒளி வீசும் அக்கொக்கைக் கண்டு வியப்புற்றான். பசியுடன் இருந்த அவன் அதைக் கொல்ல நினைத்தான்.

ஆனால் அந்தக் கொக்கோ அவனை அன்றிரவு தன் விருந்தினராக இருக்க வேண்டிக்கொண்டது.

அந்தக் கொக்கு அவனிடம் "ஐயா நான் காசியபரின் புதல்வன். என் தாய் தாட்சாயணி என்று கூறி நல்ல மீன்களைக் கொடுத்து உபசரித்தது. (தொடரும்)

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

t ypmrry,Yk;ry mn;..

**தாங்கள் அகதிகள் என்பதை நிரூபிப்பதற்கு எத்தனையோ மாதங்களாக, பற்பல வருடங்களாக, இந்த அகதிகள் தங்கள் உயிரைப் பிளந்து காண்பிக்கவேண்டியிருக்கிறது. பட்ட ரணங்களைப் படம் கீறிக் காட்டவேண்டியிருக்கிறது. நிர்வாணமாக நின்று தாங்கள் காயங்களை காட்சிப்படுத்தவேண்டியிருக்கிறது. அழுகையைக்கூட மொழிபெயர்த்துச் சொல்லவேண்டியிருக்கிறது.**

இருபதாம்நூற்றாண்டின்இணையற்ற இராணுவ நடவடிக்கையொன்றை தலிபான் தீவிரவாதிகளின் மீது தொடுக்கப்போவதாக வோஷிங்டன் அரச மாநாட்டு மையத்தில் நன்கு உயரமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் கம்பீரமாக நின்று அறிவித்தார் ஒபாமா. அதிகாரமும் அமெரிக்கத் திமிரும் அவர் பேச்சின் ஒவ்வொரு ஸ்வரத்திலும் ஒலித்தன.

"முப்பதாயிரம் மேலதிக நேட்டோ படைகளை ஆப்கானில் கொண்டு போய் இறக்கி தலிபான்களைத் துடைத்து எறியப்போகிறோம்" - என்று அவர் சொல்லி முடிக்கும் போது, அமெரிக்காவின் இன்னொரு மாநிலமாக ஆப்கான் மாறி விட்டதைப் போன்ற களிப்பில் முன்னுக்கு இருந்தவர்கள் குதூகலித்தார்கள்.




உரையைக் கேட்டுக்கொண்டிருந்த அத்தனை வோஷிங்டன் அதிகாரிகளும் கரகோஷித்து அவரை ஆசீர்வதித்தார்கள். இந்த அறிவிப்பு வெளியாகி, சரியாக பதினாறு மாதங்களில் இந்தோனேசியாவிலிருந்து புறப்பட்டு அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கரையோரம் முதலாவது ஆப்கான் அகதிப் படகு 26 பேரோடு வந்து பாறைகளில் முட்டி நின்றது.

மூன்று நாட்களில் இன்னொரு படகும் ஆப்கான் அகதிகளோடு வந்திருப்பதாக மெல்போர்ன் "த ஏஜ்" பத்திரிகையில் முன்பக்கச் செய்தி வெளியாகியிருந்தது. அடுத்தடுத்த வாரங்களில் படகில் வரத் தொடங்கிய ஆப்கான் அகதிகளால் கிறிஸ்மஸ் தீவு முகாம் திணறியது.

ஆப்கானை ஆயுதங்களால் ஆடைகட்ட ஆசைப்பட்ட அமெரிக்காவின் கனவு, ஆயிரம் ஆயிரமாக அந்நாட்டு மக்களை எல்லைகளைத் தாண்டித் துரத்தியது. சிதறிய உடல்களையும் கனவுகளையும் எந்த மலைகளுக்குள்ளும் ஒளிந்து வாழ முடியாத அப்பாவிகள், பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளின் வழியாக இந்தோனேசியாவுக்குப் பறந்தார்கள்.

முல்லைத்தீவு - கேரளா - இந்தோனேசியா பக்கங்களிலிருந்து சுமாத்ரா கடலை வெட்டியோடி வந்த தமிழ் அகதிப் படகுகளால், ஏற்கனவே மிரண்டு போயிருந்த அவுஸ்திரேலிய கடற்படையினருக்கு, ஆப்கான்களின் படகுப் படையெடுப்பு புதுவிதமான பீதியைக் கிளப்பியது.

ஏகப்பட்ட குழந்தைகளோடு குடும்பம் குடும்பமாக வந்திறங்கிய ஆப்கான் மக்களின், கிறிஸ்மஸ் தீவு அவலக் காட்சிகளை அவுஸ்திரேலியத் தொலைக் காட்சிகள் ஒரே இரவில் தங்களது தலைப்புச் செய்திகளுக்கு நகர்த்த ஆரம்பித்தன. ஓலம் கேட்ட இடமெங்கும் ஊடகவியலாளர்கள் ஒலிவாங்கியோடு போய் நின்றார்கள்.

கிறிஸ்மஸ் தீவிலிருந்து அத்தனை ஆப்கான் மக்களும் கொஞ்சம் கொஞ்சமாக அவுஸ்திரேலியாவின் வடக்கு மாநிலத்தின் டார்வின் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பின்னர், அங்கு வைத்து தரம்பிரிக்கப்பட்டவர்களில் பெரும் தொகுதியினர் விமானம் மூலம் மெல்பேர்னுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

ஆப்கானில் ஆரம்பித்த அவர்களது ஓட்டம் மலைகள், நகரங்கள், விமானங்கள், படகுகள் என்று நீண்டு அவுஸ்திரேலியாவுக்குள்ளேயும் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

ஆறு மணிக்கே இரவுக்குள் பதுங்கத் தொடங்கிவிடும் மெல்பேர்னின் குளிர்கால இரவொன்றில் அன்று அவர்கள் பொலிஸ் பாதுகாப்போடு அகதிகள் முகாம் வாசலில் வந்து இறங்கியபோது மழையும் சாதுவாகப் பெய்து ஓய்ந்திருந்தது.

நிலவை மறைத்துக்கொண்டு முகில்கள் தலைவிரிகோலமாக படுத்துக்கிடந்தன. முட்கம்பி வேலிகளில் நின்ற ஒற்றைக் கம்பத்து ஒளி விளக்குகள், புதியவர்களைப் புதினத்தோடு திரும்பிப் பார்த்தது.

அரைத் தூக்கத்துடன் பர்தாவுக்குள் சோர்ந்திருந்த பெண்கள், நீள் பயணத்தால் ஆழ்துயிலில் கரைந்த குழந்தைகள், இன்னமும் பயணம் தீரவில்லை என்ற உச்ச வெறுப்போடு சில வயோதிபர்கள், குடும்பஸ்தர்கள் என்று ஒரு பெருங்கூட்டம் ஏழு பேருந்துகளிலிருந்தும் இறக்கப்பட்டனர். வரிசையாக முகாமுக்குள் அழைத்து வரப்பட்டனர்.

இருட்டென்றாலும் புதிய அகதிகளைப் பார்ப்பதற்கென்று காத்திருந்த முகாம் வாசிகள் பேருந்துகளின் சத்தம் கேட்ட மாத்திரத்திலேயே வேலிகளின் பக்கமாக ஓடிவந்தனர். ஏற்கனவே முகாமிலிருந்த சில ஆப்கான் அகதிக் குடும்பங்கள், வந்தவர்களை நோக்கி பஸ்டோ மொழியில் வணக்கத்தைக் கூவினார்கள். புதிய குரலொன்று தமது மொழியை உச்சரிப்பது கேட்டு, வந்தவர்களுக்கு சோம்பல் முறிந்தது. உதடுகள் உற்சாகத்தோடு பதில் வணக்கம் சொன்னது.

இது மெல்பேர்ன் பெருநகரிலிருந்து வடக்கே பதினாறு கிலோமீற்றர் தொலைவில், குற்றங்கள் மலிந்த பிரதேசம் என்று பலரும் அஞ்சுகின்ற இடத்தில், அமைந்துள்ள அகதிகள் முகாம். சுற்றிவர உயரமாக இழுத்துக்கட்டிய கம்பி வேலிகளுக்கு நடுவில் பழி நிலமாகப் பலகாலமாகக் குந்திக் கொண்டிருக்கிறது.

அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சு அதிகாரத்தின் கீழ், இந்த முகாமையும், முகாமிலுள்ளவர்களின் பாதுகாப்பையும் குடிவரவு அமைச்சினால் பொறுப்பளிக்கப்பட்ட "ஞூடோ" என்ற பிரித்தானிய தனியார் நிறுவனம் நிர்வகித்து வருகிறது. இந்தத் தனியார் நிறுவனத்தின் பொறுப்பு என்ன என்று கேட்டால், பச்சையாகச் சொல்லக்கூடிய பதில், எந்த அகதியும் சாகாமல் பார்த்துக் கொள்வது. மேலதிகமாக, இங்குள்ள உயரமான கம்பி வேலிகளின் மீது தாவி எவரும் தப்பிவிடாமல் கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட, முகாமுக்கு நடுவே பெரிய மைதானம். முகாமின் கிழக்கு மூலையில் பொதுச் சாப்பாட்டு மண்டபம். அதற்கு அருகிலேயே பகலில் மாத்திரம் இயங்கும் வைத்திய நிலையம். ஒவ்வொரு முகாம் தொகுதிக்குள்ளேயும் கூட்டமாக அமைக்கப்பட்டிருந்த சிறிய கூடுகள் இங்கு "அறைகள்" என்று அழைக்கப்பட்டன. அழுதால் அடுத்த அறைக்கும் கேட்கக்கூடிய மெல்லிய மரச்சுவர்கள்.

"சார்ளி கம்பவுண்ட்" குடும்பங்களுக்கும் தனிப்பெண்களும் உரியது. "அல்பா", "பிராவோ" கம்பவுண்டுகள் தனி ஆண்களுக்கானவை. முன்பு யாராவதொரு அகதி தங்கிப் போன வெற்று அறைகளை திறந்து பார்த்தால்கூட, அங்கு இன்னமும் புகைந்து கொண்டிருக்கும் விசித்திர அமைதியொன்று, எஞ்சிய ஓலத்தின் அசரீரியாக அடிமனதில் அறைந்தது. இந்த முகாமுக்கு வருபவர்கள் அனைவரும் நாளையோ, நாளை மறுதினமோ விசாவோடு வெளியில் போய்விடலாம் என்ற எதிர்பார்ப்போடுதான், போட்ட உடுப்போடு அலைகிறார்கள்.

(அடுத்தவாரம் தொடரும்)

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
வலம்புரியின் மருத்துவச்சுடர் 259

# மண்ணிற சீனி பாவிக்க முடியுமா?

மண்ணிற சீனியை ஒரு அருமருந்து போலவும் உடலுக்கு நன்மைபயக்கும் எனவும் போலியான மிகைப்படுத்தப்பட்ட விளம்பரப்படுத்தல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

மண்ணிற சீனியும் வெள்ளைச் சீனிபோலவே நீரிழிவு உடல் நிறை அதிகரிப்பு, உடம்பில் கொழுப்பு அதிகரிப்பு போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

வெள்ளைச் சீனி போலவே மண்ணிற சீனியும் நீரிழிவு உள்ளவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மண்ணிற சீனி ஒரு ஆரோக்கியமான உணவுப் பொருள் அல்ல.

ஒப்பீட்டளவிலே வெள்ளை சீனியிலும் பார்க்க மண்ணிற சீனியில் சிறிதளவு ஊட்டச்சத்துக்களும் கனியுப்புக்களும் அதிகமாக இருக்கிறது என்ற ஒரு சிறிய விடயத்தை மூலதனமாக்கி மண்ணிற சீனிக்காக பாரிய விளம்பரப்படுத்தல்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக பல நீரிழிவு நோயாளர்களும் பொது மக்களும் மண்ணிற சீனியை அதிகளவு பயன்படுத்தத் தொடங்கியிருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

**முரண்பாடுகளை தவிர்க்க**

ஒருவரை விமர்சித்து மதிப்பிட்டு அவருடன் முரண்பட்டு கோபமுற்று போட்டியிட்டு அவரின் நடத்தைகளை மாற்ற முயன்று வாதிட்டு எமது மன அமைதியையும் நேரத்தையும் மன மகிழ்வையும் விரயமாக்குவது ஆரோக்கியம் ஆகாது.



அதற்குப் பதிலாக அவரை அவரது தனித்துவங்களுடனும் குணாதிசயங்களுடனும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, சேர்த்துக் கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வது பயன் தரும்.

வாதிட்டுப் பேசும் வார்த்தைகளிலும் பார்க்க மௌனங்கள் பலமானவை. பல அர்த்தங்கள் பொதிந்தவை. மௌனங்களும் மன்னிப்புகளும் பலரை சிந்திக்க வைத்து நல்வழிப்படுத்தும்.

**உயர் குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை நிறுத்திக் கொள்வது சாத்தியமா?**

நிறுத்திக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. உதாரணமாக அதிகரித்த உடல் நிறை உடையவர்கள் நிறை குறைப்புச் செய்யும்பொழுது இது சாத்தியமாகின்றது.

சில சிறுநீரக நோய் நிலைகள் கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுதும் இது சாத்தியமாகின்றது.

பிரசவ காலத்தில் தற்காலிக உயர்குருதி அமுக்க நிலை ஏற்படுபவர்களுக்கு பிரசவத்தின் பின்னர் இதற்கான மருந்துகளை நிறுத்தக்கூடியதாக இருக்கிறது.

உயர் குருதி அமுக்க நிலை உள்ளவர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி ஒழுங்கான உடற்பயிற்சி, உணவு முறைகளில் மாற்றம், மன அமைதி வழிமுறைகள் போன்றவற்றை கடைப்பிடித்து வருவார்களாக இருந்தால் அவர்களின் மருந்துகளின் அளவைக் குறைத்து சில சமயங்களில் நிறுத்திக் கொள்ளக்கூடிய நிலைகளும் ஏற்படலாம்.

சில ஓமோன் சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு அவர்களின் அடிப்படை நோய் நிலை கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுது அதிகரித்த குருதி அமுக்க நிலையும் தானாக குறைந்து விடும். இவர்களுக்கான மருந்துகளையும் நிறுத்திக் கொள்ள முடியும்.

உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் தன்னிச்சையாக தாமாக இதற்கான மருந்துகளை நிறுத்திக் கொள்வதோ மாற்றிக்கொள்வதோ ஆபத்தானது. மருத்துவக் குழுவின் ஆலோசனையுடனேயே இவை செயற்படுத்தப்பட வேண்டும்.

உயர் குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் அதனை நிறுத்த முடியாது.

எனவே அதனை பாவிக்காமலே இருந்து விடுவோம் என்று எண்ணிக் கொள்வது ஒரு தவறான ஆபத்தான சிந்தனை ஆகும்.

ஒருவரின் குருதி அமுக்கம் அதிகரித்துக் காணப்பட்டால் அதனை கட்டுப்படுத்துவதற்கு மாத்திரைகளின் பங்கு மிக முக்கியமானதாகும்.

Dr. சி. சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு r k g e j k h d c q { s ;r e Nj f q { i s (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

# விதை இறக்குமதி நிறுத்தம் உள்நாட்டில் உற்பத்தி செய்யத் திட்டம்

## விவசாய அமைச்சு

(கொழும்பு)

**விதை உற்பத்தி இறக்குமதியை நிறுத்தவும் தேவையான விதைகளை நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.**


நாட்டுக்குத் தேவையான கலப்பின விதைகளை உற்பத்தி செய்வதற்காக பொது மற்றும் தனியார் துறைகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஆண்டுதோறும் 28 வகையான விதைகள் நாட்டிற்கு இறக்குமதிசெய்யப்படுவதாகவும், இதற்காக அரசாங்கம் ஆண்டுக்கு 2000 மில்லியன் ரூபாய் செலவிடுவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் விலை அதிகம் என்பதால் விவசாயிகள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவேவிதைகள் இறக்குமதியை நிறுத்த விவசாயத்துறையும் தனியார் துறையும் ஒப்புக்கொண்டதாக அமைச்சர் கூறினார். (4-5)

# வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்



(கொழும்பு)

கெரவலபிட்டி மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதால் எதிர் காலத்தில் ஏற்படும் விளைவுகளை கருத்திற்கொண்டு எதிர்ப்பு தெரிவித்தோம்.

ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம் பெறவுள்ள பேச்சுவார்த்தை சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

மக்களாணைக்கு முரணாக செயற்பட்டால் மக்களின் வெறுப்பை பெற்றுக் கொள்ள நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய வளங்களை பாதுகாத்தல், தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களுக்கு முன்னுரிமையளித்து நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளதா? என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

ஜனாதிபதிநாடு திரும்பியவுடன் கெரவலபிட்டி மின்நிலைய விவகாரம் குறித்து பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளோம். இப்பேச்சுவார்த்தை சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறோம். தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு.

மக்களாணைக்கு முரணாக செயற்பட்டால் மக்களின் வெறுப்பை பெற்றுக் கொள்ள நேரிடும் என்பதற்காகவே அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு போராடுகிறோம் என தெரிவித்தார். (4-5)

# மார்பகப் புற்றுநோயால் மணிக்கு இருவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

இலங்கையில் ஒரு மணித்தியாலத்திற்கு 4 புதிய மார்பகப் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுவதோடு, இரு மார்பகப் புற்றுநோயாளர்கள் உயிரிழக்கின்றனர் என புற்றுநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதான பத்திரண தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணிகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், வருடாந்தம் ஒக்டோபர் முதலாம் திகதிமுதல் 31 ஆம் திகதி வரை மார்பகப்புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் காலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 31,800 மார்பகப் புற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கமைய மணித்தியாலயத்திற்கு 4 புதிய மார்பகப் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுவதோடு , இருவர் உயிரிழக்கின்றனர். 2019 ஆம் ஆண்டில் புதிதாக 4500 மார்பகப் புற்று நோயாளர்கள்இனங்காணப்பட்டனர். புற்று நோய் ஆண்,பெண்என இருபாலருக்கும் ஏற்படக் கூடியது. ஆனால் இதில் 100 வீத அபாயத்திற்கு உள்ளாகக் கூடியவர்கள் பெண்கள் ஆவர். மது அருந்துதல், புகையிலை உண்ணல்மற்றும் புகைப்பிடித்தல் என்பவற்றின் காரணமாகவும் தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் பரம்பரையின் காரணமாகவும் புற்று நோய் ஏற்படுகிறது.

ஆனால் இதனை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சைபெறுவதன் மூலம் முழுமையாகக் குணப்படுத்த முடியும். எனவே 20 வயதுக்கு மேற்பட்ட சகல பெண்களும் வாராந்தம் மார்பகப் புற்றுநோய் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (4-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞானிகள்

ஒருத்தர் தனியாக ஒரு இடத்தில் கண்ணை மூடிக்கொண்டே உட்கார்ந்திருக்கிறார். அவர் தூங்கிக் கொண்டிருக்கின்றாரா–தியானம் செய்து கொண்டிருக்கின்றாரா? எப்படி கண்டு பிடிக்கிறது?

நமக்குத் தெரிந்த வரைக்கும் தூக்கம் என்றால் தலை அடிக்கடி சாயும். பின் நிமிரும். தியானம் என்றால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும். தூக்கத்திற்கும் தியானத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒரு முட்டாள் தூங்கப் போனால் முட்டாளாகவே திரும்பி வருகின்றான். இப்படி பெரியவர்கள் எல்லாம் சொல்கின்றார்கள். அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? இப்பொழுது நாம் அழகான ஒரு ரோஜாப் பூவைப் பார்க்கின்றோம்.

ஆகா எவ்வளவு அழகாக இருக்கு இது என்று வியக்கின்றோம். ஒரு ஞானி அதே ரோஜாப் பூவைப் பார்க்கின்றார். அவரும் நினைக்கின்றார் ஆகா இது எவ்வளவு அழகாக இருக்கு என்று. உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்கள் மூலமாக உணர்கின்றோமோ அப்படித்தான் அவர்களும் உணர்கின்றார்கள். அதிலே ஒன்றும் வித்தியாசமில்லை.

அல்வா சாப்பிடுகின்றோம். அது நமக்கு மட்டும் தான் இனிக்கும். ஞானிகளுக்கெல்லாம் கசக்கும் என்றா சொல்லுவோம்? அப்படி இல்லை அதிலே வித்தியாசம் இல்லை.

பின்பு ஞானிகளுக்கும் நமக்கும் என்ன தான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக் கட்டத்திலே ஆரம்பமாகின்றது? அதை இப்பொழுது பார்ப்போம். இப்பொழுது மறுபடியும் அந்த ரோஜா பூவிடம் போவோம். ஞானி அதைப் பார்க்கின்றார்.

ஆகா எவ்வளவு அழகாக இருக்கின்றது என்று நினைக்கின்றார். அதற்கு பின்பு அதையே நினைக்கிறதில்லை. வேறு வேலையைப் பார்க்கப் போயிடுவார். அல்லது இயற்கையின் ஆற்றலைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார் அவ்வளவு தான். ஆனால் நாம் அப்படிச் செய்ய மாட்டோம்.

நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலில் அந்த ரோஜாப் பூவைப் பார்ப்போம். ஆக எவ்வளவு அழகாக இருக்கு என்று நினைப்போம். அந்த அழகை ரசிப்போம். பின்பு இந்த மலர் எங்களிடம் இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று நினைப்போம். அதன்பின்பு அந்த மலர் நமக்கு வேண்டும் என்று நினைப்போம்.

அதுக்கு அடுத்த கட்டம் அந்த மலர் இல்லை என்றால் எங்களால் வாழ முடியாது என்கின்ற நிலைமைக்கு வந்து விடுவோம். உடனே அந்த மலரை அடைவதற்கு முயற்சி செய்வோம்.அதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள் மேலே நமக்குக் கோபம் வரும். அந்த கோபத்தின் காரணமாக எங்கள் விவேக புத்தியை இழப்போம். யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறந்து விடுவோம்.

அதன் காரணமாக ஞாபக மறதி ஏற்படும். அதாவது முன்பு விவேக புத்தி மழுங்கியிருந்தது என்றால் அது இப்பொழுது அடியோடு இல்லை என்கின்ற நிலை ஏற்படும்.அதன் காரணமாக எங்கள் புத்தியை இழப்போம். கடைசியில் அழிவோம். இந்த நிலைமை நமக்கு வந்துவிடக்கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? நமக்கு கெடுதல் செய்யக் கூடிய ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.

ஒரு விடயம் என்ன தெரியுமா? எந்த ஆசைக்கும் முதலில் வலு கிடையாது. அதைப் பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகின்றது. இளம் தளிராக இருந்தது. இப்பொழுது பெரிய மரமாக ஆகிவிடுகின்றது.

ஞானிகள் இந்த அளவுக்கு அதை வளர விடுவதில்லை. அதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு இளைஞன் கையிலே ஒரு குச்சியை வைத்துக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருக்கின்றான். இன்னொரு வயதானவர் கையிலே ஒரு குச்சியை வைத்துக் கொண்டு நடந்து போகின்றார். அது அவருக்கும் ஊன்றுகோல். அது இல்லை என்றால் அவரால் நடக்க முடியாது. அது தவறி கீழே விழுந்தால் அவரும் விழுந்து விடுவார்.

ஆனால் அந்த இளைஞன் அப்படி இல்லை. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துக் கொண்டு போனால் கூட அவன் கவலைப்பட மாட்டான். அவன் அந்தக் கைத்தடியைப் பயன்படுத்துவது மாதிரித்தான் ஞானிகள் உலகப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால் எங்களை மாதிரி சாதாரண ஆட்கள். அந்த வயதானவர் கைத்தடியை பயன்படுத்தியது மாதிரி உலகப் பொருட்களைப் பயன்படுத்துகின்றோம். இதுதான் ஞானி களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம். ஞானிகள் பொருட்களைத் துறக்க மாட்டார்கள்.அவற்றின் மீது உள்ள பற்றுதலைத் தான் துறப்பர். எனக்குத் தெரிந்த ஞானி ஒருவர் இருக்கின்றார். அவர் சொன்னார்...1988 ஜூன் மாதம் முதல் திகதியை என்னாலே மறக்க முடியாது என்றார்.

ஏன் என்று கேட்டேன். அது தான் எனக்கு ஞானம் வந்த நாள் என்றார். அப்படியா? என்றேன்.

ஆமாம் அன்றைக்குத் தான் எனக்கு கல்யாணம் ஆகியது. என் மனைவி பேர் ஞானம் என்றார்.

# 18 மாதங்களில் 761 பேர் உயிரிழப்பு

## சுகாதாரத் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் செப்டெம்பர் மாதத்தில் கொவிட்-19 நோய்த்தொற்றினால் 9 ஆயிரத்து 337 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 348 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 467 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 130 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட த்தில் ஆயிரத்து 986 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், 43 பேர் உயிரிழந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 672 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 19 பேர் உயிரிழந்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 436 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் நால்வர் உயிரிழந்துள்ளனர்.2020 மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் முதலாம் திகதி வரையான 18 மாதங்களில் வடக்கு மாகாணத்தில் 36 ஆயிரத்து 584 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 761 பேர் உயிரிழந்துள்ளனர்.என சுகாதாரத் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.(7-5-33)



வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற சிறுவர் தினமும் மர நடுகையும்"எல்லாவற்றிலும் சிறுவர்களுக்கு முன்னுரிமை" என்னும் தொனிப் பொருளில் சிறுவர் தின நிகழ்வும், மரநடுகையும் வவுனியா வேப்பங்குளம் அன்பகத்தில் வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜெ.கெனடி தலைமையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம் பெற்றது. (படம்-வசந்தரூபன்)

# வீதி ஓர நிழல் மரங்கள் இனந்தெரியாதோரால் எரித்தழிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் ஏ9 வீதியோரம் நாட்டப்பட்டிருந்த நிழல் மரங்கள் இனந்தெரியாதோரால் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளது.பசுமை நிழல்கள் அமைப்பினரால் வைத்து பராமரிக்கப்பட்டு வந்த வீதிஓர நிழல் மரங்களே இவ்வாறு தீ வைத்து நாசமாக்கப்பட்டுள்ளன. குறித்த அமைப்பினர் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதியோரங்களில் மரங்களை நாட்டி பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(7-5-30)





நீண்டகாலமாக புனரமைப்பு எதுவுமின்றி காணப்பட்ட வட்டக்கச்சி சந்தை கரைச்சிபிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இரண்டு தசம் ஐந்து மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மக்கள் பாவனைக்காக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(படம்- தேவானந்தன்)

## கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில்

# பைஸர் தடுப்பூசி பணிகள் ஆரம்பம்

(தர்மபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நாட்பட்ட நோயையுடைய மாதாந்த சிகிச்சை பெறும் சிறுவர்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பைசர் தடுப்புசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் சுகாதாரப்பணிப்பாளர் மருத்துவர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.



குறித்த விடயத்தை தொடர்ந்து மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் மாதாந்த சிகிச்சை, உளநல சிகிச்சைக்கு செல்லும் சிறுவர்கள் தடுப்புசியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மாவட்டத்தில் குறித்த நாட்பட்ட நோயையுடைய பதிவு செய்யாத சிறுவர்கள் அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையில் பெயர்களை பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

பெற்றோர்கள் குறித்த சந்தர்ப்பத்தை தவறவிடாது பிள்ளைகளை அழைத்து வந்து தடுப்புசிகளை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார். (7-5-6-316)

# இரத்ததான முகாம்



(குப்பிழான்)

விதையனைத்தும் விருட்சமே செயற்திட்டத்துடன் யாழ்.அடைக்கல அன்னை இளைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் இன்று காலை-08.30 மணி முதல் பிற்பகல்-01.30 மணி வரை அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (7-5-18)

## வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

# நடமாடும் தடுப்பூசித் திட்டம் முன்னெடுப்பு

(குருமன்காடு)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் மழைக்கு மத்தியிலும் ஒரே நாளில் 30 பேருக்கு நடமாடும் தடுப்பூசித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 60 வயதிற்கு மேற்பட்ட நிலையில் நோய்த் தாக்கம் காரணமாக வீடுகளில் இருப்போர், தடுப்புசி பெறத் தவறியோர், விசேட தேவைக்குட்பட்டோர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஊடாக நடமாடும் தடுப்புசிக்கு விண்ணப்பித்தோர் என பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வீடுகளுக்கே சென்று சினோபார்ம் தடுப்புசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



வவுனியா சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையைச் சேர்ந்த வைத்தியர் பிரசன்னா தலைமையில் மழைக்கு மத்தியிலும் நம்பைக்குளம், குட்செட்வீதி, வவுனியா நகரம், பண்டாரிக்குளம், வைரவ புளியங்குளம், தோணிக்கல், மூன்றுமுறிப்பு ஆகிய பகுதிகளில் 30 பேருக்கு சினோபார்ம் தடுப்புசிகள் வழங்கப்பட்டன.

கிராம உத்தியோகத்தர் ஊடாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்கு அமைவாக குறித்த நடமாடும் தடுப்புசி வழங்கும் செயற்றிட்டம் மேலும் சில தினங்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-5-6-250)

## யாழ்ப்பாணம்– அக்கரைப்பற்று

# அத்தியாவசிய சேவை ஊழியருக்கான பேருந்து சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் கடமை புரியும் அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களின் வேண்டுகோளிற்கமைவாக இன்று இரவு 7 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கரைப்பற்றிற்கு பேருந்துச் சேவை ஒன்று நடத்தப்பட உள்ளதாக இ.போ.ச வட மாகாண பிரதான பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதில் பயணம் செய்யும் அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்கள அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்து உத்தியோகத்தர்கள் தங்கள் பயணங்களை மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார். (7-5)

# தகாத வார்த்தைகளால் திட்டியவரை மின்கம்பியில் சிக்கவைத்து கொலை

(கொழும்பு)

வத்தேகம பொலிஸ் பிரிவில் மீகமவத்த பிரதேசத்தில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதல் தீவிரமடைந்ததில் , நபரொருவரின் வீட்டு வளாகத்திற்குள் சென்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்த போது , குறித்த வீட்டு உரிமையாளரால் வைக்கப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்க வைத்து குறித்து நபரை கொலை செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 19 வயதுடைய யட்டிராவண - வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மின் கம்பியை வைத்திருந்த 50 வயதுடைய மீகமவத்த பிரதேசத்தைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். வத்தேகம பொலிஸாரால் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.(4-5)

# மகிந்த வீட்டுப்பூனை மிஸ் கண்டுபிடித்தால் பரிசு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்சவின் மகன் ரோஹித ராஜபக்ச வளர்த்த செல்லப்பிராணியான பூனை காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த பூனையைக் கண்டுபிடித்து தருபவருக்கு பெரும் பரிசு தரப்படும் எனவும் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறிந்த பூனை அங்காரோ வகையை சேர்ந்தது எனவும் அதன் பெறுமதி900 டொலர் முதல் 3000 டொலர் வரை இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# திரவ எரிவாயு மீதான உரிமையை எந்த நாட்டிற்கும் வழங்கக்கூடாது

## வலியுறுத்துகிறார் டலஸ்

(கொழும்பு)

இலங்கைக்கு உரித்தான திரவ இயற்கை எரிவாயுவிற்கான ஏக போக உரிமையை எந்த வெளி நாட்டிற்கும் வழங்கக்கூடாது என ஊடக அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

அடுத்த பாராளுமன்ற கூட்டத்தில், மின்சக்திமற்றும் எரிசக்திஅமைச்சகம், நிதி அமைச்சரிடம் இது தொடர்பான விடயங்களை முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், நமது நாட்டின் திரவ இயற்கை எரிவாயு வழங்கல் மீதான ஏக போக உரிமை மற்றொரு நாட்டிற்கு வழங்கப்படக்கூடாது என்பது தனது உறுதியான நிலைப்பாடு என்றும், இது தொடர்பில், அமைச்சரவையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் இது தொடர்பாக ஜனாதிபதியுடன் விவாதிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 81 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் 81 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 79,804 பேர் தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது. இவை தவிர சோதனைகளின் பின்னர் 732 வாகனங்களில் பயணித்த 1004 பேர் மேல் மாகாணத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று 956 வாகனங்களில் பயணித்த 1487 பேர் மேல் மாகாணத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (4-5)









ரஷ்யாவில் நடைபெற்ற 58 ஆவது உலக இராணுவக் குத்துச்சண்டை போட்டியில் இலங்கை இரண்டு வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இணைந்து கொண்டது.

குடியியல் நடைமுறைக்கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

# சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

**செல்வரட்ணம் சுரேஸ்,**
கச்சாய் வீதி,
கொடிகாமம்,
தற்போது லண்டனில் வசிப்பதனால்
இவர் தனது
அற்றோணித்தத்துவகாரரான
கொடிகாமம் கச்சாய் வீதியைச்
சேர்ந்த **காராளபிள்ளை**
**கஜேந்திரன்** மூலம் தோற்றம்

-வழக்காளி-

வழக்கிலக்கம் : நானாவிதம் / 210 / 2021 எதிர்

**1. புவனேஸ்வரன் உஷாந்தன்**
தலைவர்
**2. தர்மலிங்கம் இரவீந்திரன்**
செயலாளர்
**3. துரைச்சாமி தெய்வேந்திரநாதன்**
பொருளாளர்
**4. துரைசிங்கம் கனேஸ்குமார்**
உபதலைவர்
**5. நாகதேவன் தேவசுதன்**
உபசெயலாளர்
**6. யோ.சிவசங்கர்**
**7. கூசுதர்சன்**
**8.தே.துசியந்தன்**
**9. ப.தேவேந்திராணி**
**10.வி.புனிதமலர்**
**11.ச.குகதாசன்**
**12.கூ.பத்மநாதன்**
**13.ச.யாழினி**
**14.த.உஷாந்தன்**
**15.செ.ஆனந்தநடராஜா**
நிர்வாக சபை உறுப்பினர்கள்,
அனைவரும்
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

-எதிராளிகள்-

மேற்குறித்த எதிராளிகளுக்கு,

மேற்குறித்த வழக்கானது சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளியால் மேலே பெயர் குறிப்பிட்டிருக்கும் எதிராளிகளுக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களை வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இதன் பின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தில் அமைந்துள்ள வாசிகசாலை **"சதாசிவ வாசிகசாலை"** என்றபிரகடனமும் தீர்ப்பும்.
2. கூட்டிணைக்கபடாத நிறுவனமான சதாசிவம் வாசிகசாலையின் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஓட்டங்கேணி சனசமூக நிலையத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் 1-15 வரையான எதிராளிகளுக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்து கொண்டு நடாத்த குடியியல் நடபடிமுறைக்கோவையின் 16 ஆம் பிரிவின் கீழ் அனுமதி வழங்குமாறும் குறித்த அனுமதியை இலங்கையில் பிரசுரிக்கப்படும் பத்திரிகை ஒன்றில் பிரசுரிப்பதற்கான அனுமதிக்கும் கட்டளை.
3. எதிராளிகளால் ஓட்டங்கேணி சனசமூக நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட வாசிக சாலையை மீளவும் **சதாசிவ வாசிகசாலை** என பெயர் மாற்றம் செய்ய எதிராளிகளை பணிக்கும் கட்டளையும் தீர்ப்பும்
4. வழக்கு விளங்கித் தீர்க்கப்படும் வரை குறித்த வாசிகசாலையின் பெயரினை எதிராளிகள் அவர்களது தங்குனர்கள் முகவர்கள் ஏவலாளர்கள் உட்பட எவரும் மாற்றி **"ஓட்டங்கேணி சனசமூக நிலையம்"** என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தக்கூடாது என்ற நிரந்தர தடைக் கட்டளையும் தீர்ப்பும்
5. வழக்கு விளங்கித் தீர்க்கப்படும் வரை குறித்த வாசிகசாலையின் பெயரினை எதிராளிகள் அவர்களது தங்குனர்கள் முகவர்கள் ஏவலாளர்கள் உட்பட எவரும் மாற்றி **"ஓட்டங்கேணிசனசமூக நிலையம்"** என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தக்கூடாது என்ற இடைக்காலத் தடைக் கட்டளையும் தீர்ப்பும்
6. வழக்கு விளங்கித் தீர்க்கப்படும் வரை குறித்த வாசிகசாலையின் பெயரினை எதிராளிகள் அவர்களது தங்குனர்கள் முகவர்கள் ஏவலாளர்கள் உட்பட எவரும் மாற்றி **"ஓட்டங்கேணி சனசமூக நிலையம்"** என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தக்கூடாது என்ற கட்டாணை
7. வழக்கு செலவும்,
8. நீதிமன்றம் நியாயமெனக் கருதும் இதர பிற நிவாரணங்களும்

இவ் வழக்கானது 04.10.2021 ஆம் திகதி அன்று திறந்த மன்றில் அழைக்கப்பட இருக்கின்றது என்றும் இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**ஆதன அட்டவணை**

வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோவிற்பற்று, கச்சாய் இறை **"மண்டலிமுதலிபனை"** நிலப்பரப்பு இருபது (நில.பர 20) இதில் தென்கிழக்கு மூலையாக நில.பர அரையும் (நில.பர 1/2) வாசிகசாலை கட்டடமும் பயிர்வகைகளும். இந்த நில.பர 1/2 இற்கும் எல்லைகள் **கிழக்கு** :- றோட்டு **வடக்கும்** :- **மேற்கும்** :- ஒழுங்கை **தெற்கு** :- தர்மலிங்கம் இரவீந்திரனுக்குரிய ஆதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

மன்றின் கட்டளைப்படி

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
சாவகச்சேரி

8095

# தடுப்பூசி செலுத்திக் கொள்ள இளைஞர்கள் தயக்கம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

20 முதல் 30 வயதிற் குட்பட்டவர்களில் பெரும் பாலானவர்கள் கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள தயக்கம் காட்டுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் செனால் பெர்னாண்டோ இதனை தெரிவித்தார்.

20 முதல் 30 வயதுக் குட்பட்ட 3.3 மில்லியன் இளைஞர்களில் மிகக்குறைந்த அளவிலானவர்களுக்கே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே தங்களையும் தங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாப்பதற்காக இளைஞர்களும் விரைவில் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.(4-5)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் 28 ஆயிரத்து 25 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த ஆண்டு செப்டெம்பர் வரையான காலப் பகுதியில் 12 ஆயிரத்து 916 டெங்கு நோயாளர்கள் மட்டுமே பதிவாகியுள்ளனர்.

மேலும் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் மாத்திரம் 1,208 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இந்த ஆண்டு 429 நோயாளர்கள் மட்டுமே பதிவாகியுள்ளனர். எனினும், தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு பரவல் மீண்டும் அதிகரிக்கலாம் எனச் சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர். (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்

## ஐஸ்வர்யம் அருளும் ஔவையார் விரதம்



நள்ளிரவில் நடத்தப்படும் இந்த வழிபாடு வயதான சுமங்கலிப் பெண்ணின் தலைமையில் நடைபெறும். அப்போது அந்தப் பெண் ஔவையாரின் வரலாற்றை (செவ்வாய் பிள்ளையார் கதையை) மற்றப் பெண்களுக்கு எடுத்துச்சொல்வார்.

கொழுக்கட்டை மாவினால் தயாரித்த விளக்கில் எண்ணெய் ஊற்றி பூஜையின் போது விளக்காகப் பயன்படுத்துவார்கள். பின்னர் வயதான பெண் ஒருவர் ஒரு வட்ட வடிவப் பாத்திரத்தில் தன் தாலிச்சரட்டைக் காட்டுவாள்.

தண்ணீரில் தெரியும் பிம்பத்தை மற்றப் பெண்கள் அனைவரும் கும்பிடுவார்கள்.

பிரசாதமாக வழங்கப்படும் கொழுக்கட்டையை பெண்கள் மட்டுமே சாப்பிடுவார்கள். ஆண்களுக்குக் கொடுக்கக் கூடாது என்பது ஐதீகம்.

பூஜைப்பொருட்களை ஆற்றில் கரைத்துவிடுவார்கள். ஆற்றிலிருந்து திரும்பும் போது நிறைகுடம் நிறையத் தண்ணீர் எடுத்து வருவர்.

விரதத்தின்போது வைத்துள்ள பிள்ளையாரை நெல் பானைக்குள் தனியாக வைத்து விடுவார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த விரதம் பிரசித்திபெற்றது.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஐந்து மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.இரத்தினபுரி, கேகாலை, கண்டி, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கோரப்பட்டுள்ளனர். (4-5)

## மேலும் 4 லட்சம் பைஸர் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

நாட்டுக்கு மேலும் 4 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டன.இதற்கமைய இந்த வாரத்தில் 8 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன. கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் குறித்த தடுப்பூசி தொகை நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய அமெரிக்காவிலிருந்து இதுவரையில் 2.4 மில்லியன் தடுப்பூசிகள் நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன. (4-5)

## பணப் பிணக்கு

### மனைவியைக் கொன்ற கணவன்

(கொழும்பு)

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் ஒந்தாச்சிமடம் பிரதேசத்தில் கணவன், மனைவிக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் கணவனால் தாக் குதலுக்குள்ளான மனைவி உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் 38 வயதுடைய மகிளூர் பிரதேசத்தைச் சேர்ந்த கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் வெளிநாட்டில் தொழில் புரிந்து நாடு திரும்பியிருந்த நிலையில், வெளிநாட்டில் இருந்த போது அவரால் அனுப்பப்பட்ட பணம் தொடர்பில் கேட்ட போதே இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (4-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 160 | 240 |
| தக்காளி | 70 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 |
| கோவா | 140 | 180 | 200 |
| கரட் | 140 | 200 | 160 |
| பூசணி | 70 | 80 | 80 |
| புடோல் | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 140 |
| பாகற்காய் | 450 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 320 | 240 |
| லீக்ஸ் | 220 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 180 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 340 | 200 | 240 |
| போஞ்சி | 200 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 150 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 350 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 65 | 50 | 50-70 |
| இராசவள்ளி | -- | 250 | -- |
| வெங்காயப்பூ | -- | 180 | 280 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 |
| வல்லாரை | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 30 | 100 |

நம்மால் வெரிய காரியங்களைச் செய்து முடிக்க முடியும். ஆனால், அதற்கு ஏற்பச் சிந்திக்கும் பழக்கத்தைநாம் வளர்த்துக் கொள்ளவில்லை. இந்தக் குறையை உடனே போக்குவோம். – அஜீத்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வரப்புயர நீருயரும்! றோட்டுயர வெள்ளமுயரும்!

மன்னர்களைப் புகழ்ந்து பாடும் வழமை அந்தக் காலத்துத் தமிழ்ப் புலவர்களின் பணியாக இருந்துள்ளது.

இவ்வாறு மன்னர் பெருமக்களைப் புகழ்ந்து பாடுகின்ற புலவர்களுக்கு மன்னர்கள் பொன்னும் பொருளும் ஈந்தருளுவர். இஃது ஒரு சிறு தகவல் மட்டுமே.

ஒரு முறை மன்னர் சபையில் புலவர்கள் கூடியிருந்து மன்னர் பெருமானைப் புகழ்ந்து பாடுகின்றனர்.

அப்புலவர் சபையில் ஔவைப் பிராட்டியாரும் அமர்ந்துள்ளார்.

மன்னனைப் புகழ்ந்து பாடுகின்ற சந்தர்ப்பம் வந்தவிடத்து ***வரப்புயர*** என்று கூறிவிட்டு ஔவையார் அமர்ந்து கொண்டார்.

அங்கிருந்த எவருக்கும் அதன் பொருள் விளங்கவில்லை.

ஔவையே! உங்கள் பாட்டின் விரிபொருளைக் கூறுமின்! என்ற கோரிக்கை எழ,

*வரப்புயர நீருயரும்!*
*நீருயர நெல் உயரும்!*
*நெல்லுயரக் குடியுயரும்!*
*குடியுயரக் கோன் உயர்வான்!*

என ஔவையார் பாடலை முழுமைப்படுத்த; புலவர் சபை ஔவையாருக்கு மிகுந்த பாராட்டைத் தெரிவித்து மகிழ்கின்றது.

ஔவைப் பிராட்டியார் இப்போதிருந்தால் என்று ஒரு கற்பனை செய்தோம். அந்தக் கற்பனையில்,

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு ஔவையார் செல்கிறார். அங்கு ஔவையே கருத்துரைக்குக! என்று கேட்க, அவர் ***றோட்டுயர*** என்று கூறிவிட்டு அமர்ந்து கொள்கிறார்.

ஔவையார் கூறியதன் பொருளை உணர்ந்து கொள்ள முடியாத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினர்; ஔவையே நீங்கள் கூறியதன் விரிபொருளைத் தருக! என்கின்றனர்.

ஔவையார் மீண்டும் எழுந்து
*றோட்டுயர வெள்ளம் உயரும்!*
*வெள்ளம் உயர மக்கள் இடம்பெயர்வர்!*
*மக்கள் இடம்பெயர,*
*அனர்த்த முகாமைத்துவம்*
*நிவாரணம் தருமே!*

என்றவாறு பாடலை முடிக்கின்றார்.

ஔவையே! தாங்கள் கூறியதற்கு ஏதேனும் உதாரணம் தருக! என்று ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கேட்க,

ஐயனே! யாழ்ப்பாணம் பிறவுன் வீதிக்குச் சென்று பாருமின்! இருமருங்கும் வடிகால் நிலமட்டம் தாண்டி உயர்ந்து நிற்கிறது.

பெய்கின்ற மழைவெள்ளம் காணி நிரம்பி வீட்டு வாசல்படி ஏறி உள்ளறை, சமையலறை எல்லாம் சென்று தேடுதல் நடத்தி, மென்று விழுங்கி மிஞ்சியதை ஏப்பமாய் வடிகாலில் தள்ளிவிட, அந்த வெள்ளமே வடிகால் வழி சென்று கரை ஒதுங்குமாம். என்கிறார் ஔவையார்.

திகைத்து நிற்கிறது ஒருங்கிணைப்புக் குழு. அது கண்ட ஔவையார் எதற்கும் மாரி வரட்டும் மக்காள் என்றபடி எழுந்து செல்கிறார்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தியமைக்க
# இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கியது ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

**ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்தியமைப்பதற்கு எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கியிருக்கின்றது.**

சிறந்த நிர்வாகம், சட்டத்தின் ஆட்சிமற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையேயான செயற்குழுவின் 5 ஆவது கூட்டம் கடந்த புதன் கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கையினால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இச்சந்திப்பின்போது சிறந்த நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை உறுதிப்படுத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன தொடர்பில் இருதரப்பினரும் தாம் கொண்டிருக்கின்ற கடப்பாட்டை மீளுறுதிப்படுத்தினர்.

அத்தோடு அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் இருதரப்பினரும் கொண்டிக்கும் அக்கறை தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன் இருதரப்பினதும் பொதுவான அக்கறைக்குரிய விடயங்களில் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கும் இதன்போது இணக்கம் காணப்பட்டது.

சிறுபான்மையின சமூகங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் வெறுப்புணர்வுப் பேச்சுக்களைக் கையாள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

அத்தோடு மரண தண்டனை குறித்து தமது எதிர்ப்பை வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இலங்கை அதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதைத் தாம் ஊக்குவிப்பதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# இராணுவப் பேருந்து வவுனியாவில் விபத்து
## பலர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் இராணுவ பேருந்து விபத்திற்குள்ளானதில் பலர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதவாச்சி பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவ பேருந்து புனாவைக்க அண்மித்த பகுதியில் வந்து கொண்டிருந்தபோது முன்னால் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் பேருந்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் சிறுகாயங்களிற்குள்ளாகினர். (ம-250,299)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 04 ஆம் திகதி திங்கட்கிழமை காலை8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** ரோட்மணட் எலெக்ட்ரோ எலக்ட்ரிக்கல், குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், மணியர்குளம் (வீட்டுத் திட்டம்) நித்திய நகர், ரங்கீத்கம, சங்கராபுரம், வாரிக்குட்டியூர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# பிறந்து 24 நாட்களேயான சிசு கோவிட்டால் பலி
## யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பிறந்து 24 நாட்களேயான சிசு ஒன்று கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளது.

நீர்வேலியைச்சேர்ந்த பவிகரன் நிருஜா என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சுவாசிக்க சிரமப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு வெளிநோயாளர்பிரிவில் பரிசோதனை செய்த போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்து காணப்பட்டது.


பிசிஆர்பரிசோதனையில்குழந்தைக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,33)

## மருத்துவக் குறிப்பு

பருப்புக்கீரையைச் சமைத்துச் சாப்பிட உடல் குளிர்ச்சியடையும். கண்கள் ஒளி பெறும். குளிர்ந்த உடல் உடையோர் இதனுடன் மிளகு, சீரகம், சேர்த்து சாப்பிடலாம்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖"மரங்களின் வேர் அருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி தரா மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்"

❖"இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்"

❖"என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்"

❖ 'மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை'

❖ 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக'

❖ 'உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்'

இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

❖மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

09

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்





அன்றிரவு 7:15 மணிக்கு அரச வானொலியில் பாப்ராக்கர்மாலின் முன் கூட்டியே பதிவு செய்யப்பட்ட குரல் மூலம் ஆப்கானிஸ்தான் அமீனிடம் இருந்து விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மொஸ்கோவில் இடம் பெயர்ந்திருந்த நிலையில் பாப்ராக்கர்மால் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"புயல் 333" என அழைக்கப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையின் மூலம் ஆப்கானிஸ்தானின் முக்கிய இடங்களைச் சோவியத் இராணுவத்தின் 40ஆவது படைப்பிரிவு கைப்பற்றியது.

### முகாஜிதீன்களின் எதிர்ப்பு

ஆப்கானில் கம்யூனிச அரசை எதிர்த்துப் பல கிளர்ச்சிக் குழுக்கள் தோன்றின. பிரதேசவாரியாக வெவ்வேறு சித்தாந்தங்களைக் கொண்டவையாக இவை இருந்த போதிலும், இஸ்லாமிய எழுச்சி மற்றும் கம்யூனிச எதிர்ப்பு என்பனவற்றில் இவை அனைத்தும் ஒத்திருந்தன.

இவர்களுக்குப் பல உலக நாடுகளும் மறைமுகமாக உதவிசெய்தன. அவற்றுள் அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரண்டும் அதிக அளவில் பொருளாதார உதவிகளைச் செய்தன. கூடவே எகிப்து, துருக்கி, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் ஆயுதங்கள், ஏவுகணைகள் மற்றும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஆகியவற்றைக் கொடுத்துதவின.

சீனாவும் கரந்தடிப் போர் முறைக்கு உதவக்கூடிய பல ஆயுதங்களைக் கொடுத்தது. இவ்வாறு கொடுக்கப்பட்ட உதவிகள் அனைத்தும் பாகிஸ்தானின் உளவு அமைப்பு மூலமாக பல்வேறு முகாஜிதீன் அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் சோவியத் ஒன்றியத்தில் இருந்த எல்லைப் பிரச்சினை காரணமாக, சீனாவும் இவர்களுக்கு உதவியது. ஆரம்பத்தில் பாகிஸ்தானில் வைத்துக் கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சியளித்த சீனா, பின்பு சீனாவுக்கே அதன் முக்கிய வீரர்களை அழைத்துப் பயிற்சி கொடுத்தது.



1983ல் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், முஜாகிதீன் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்துப் பேசினார்.

1983 இல் அமெரிக்கஜனாதிபதி ரொனால்ட் ரீகன், ஆப்கானிஸ்தான் முஜாகிதீன் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்துப் பேசினார். (தலிபான்களை வளர்த்து விட்டதே ஒரு வகையில் அமெரிக்காதான்) ஆப்கானிஸ்தான் முஜாகிதீன்களுக்கு தேவையான ஆயுதங்களும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் வழங்கியது.

> 1983 இல் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன், ஆப்கானிஸ்தான் முஜாகிதீன் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்துப் பேசினார். (தலிபான்களை வளர்த்து விட்டதே ஒரு வகையில் அமெரிக்காதான்) ஆப்கானிஸ்தான் முஜாகிதீன்களுக்கு தேவையான ஆயுதங்களும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் வழங்கியது.

போர் ஆரம்பித்த மூன்று மாதங்களுக்குள்ளாகவே, ஆப்கானின் 20% நிலப்பரப்பை சோவியத் படைகள் பிடித்து விட்ட போதிலும் மீதம் இருந்த 80% இடங்கள் பல்வேறு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. குறிப்பாக வட கிழக்கு மாகாணங்களில் கிளர்ச்சியாளர்களின் கையே ஓங்கி இருந்தது.

மேற்கு ஆப்கானிய பகுதிகள் சோவியத் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும், அங்கு ஈரானிய புரட்சிக் குழுக்கள் ஊடுருவும் வாய்ப்பு அதிகம் இருந்ததால் அதையும் கண்காணிக்க வேண்டிய கட்டாயத்துக்கு சோவியத் படைகள் தள்ளப்பட்டன. மேலும் சோவியத் படைகளின் நேரடித் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் கரந்தடிப் போர் முறையில் இறங்கின. ஆப்கானின் இயற்கையான குன்றுகளும் மலைகளும் நிறைந்த நில அமைப்பு





கிளர்ச்சிக் குழுவினருக்கு மிகவும் சாதகமாக அமைந்தன. அதே நேரத்தில், சரியான வீதி வசதிகள் இல்லாத இந்தக் குன்றுகளை அடைய முடியாமல் சோவியத் பீரங்கிப் படைகளும் தடுமாறின. இது குறிப்பிடத்தக்க அளவு கிளர்ச்சியாளர்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தன.



குறிப்பாகப் பஞ்சிர் பள்ளத்தாக்குப் பகுதிகளிலிருந்து கிளர்ச்சிக் குழுக்களை விரட்ட, 1980 முதல் 1985 வரை மொத்தம் ஒன்பது முறை சோவியத் படைகள் போரிட்டன. இந்தத் தாக்குதல்களில் அதிக அளவிலான விமானங்களும், போர்வீரர்களும் ஈடுபடுத்தப் பட்டனர். இவற்றில் சோவியத்படைகள் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றிபெற்ற போதும், அதைத் தக்கவைக்க முடியவில்லை.

> பஞ்சிர் பள்ளத்தாக்கு பகுதிகளிலிருந்து கிளர்ச்சிக் குழுக்களை விரட்ட, 1980 முதல் 1985 வரை மொத்தம் ஒன்பது முறை சோவியத் படைகள் போரிட்டன. இந்தத் தாக்குதல்களில் அதிக அளவிலான விமானங்களும், போர் வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். இவற்றில் சோவியத் படைகள் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி பெற்ற போதும், அதைத்தக்க வைக்க முடியவில்லை.

ஒவ்வொரு முறை வீழ்த்தப்பட்ட போதும் மீண்டும் மீண்டும் கிளர்ச்சியாளர்கள் குழு பள்ளத்தாக்கு பகுதியைத் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன. மேலும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் இருந்த அனேக நகரங்களும், பாதுகாப்பு படைகளின் சோதனைச் சாவடிகளும் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு ஆளாகின.

ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் சோவியத் படைகளுக்கு ஆதரவு இருந்த போதிலும், தொடர்ந்த காலங்களில் பெருவாரியானவர்கள் கிளர்ச்சிக் குழுக்களில் இணையத் தொடங்கினர். மேலும் ஆப்கான் இராணுவத்தில் இருந்த சில வீரர்களும் கூடச் சோவியத் படைகளுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினர். இது சோவியத் இராணுவத்துக்கு மிகுந்த பின்னடைவாக அமைந்தது.

(தொடரும்...)

## 13 ஆயிரத்தை...

55 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இதனால் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இலங்கையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 19 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## சிறைக் கைதி...

பட்டிருந்த சிறைக் கைதிகளைப் பார்வையிடும் செயற்பாடு மீண்டும் முன்னெடுக்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், நாளை 4ஆம் திகதிமுதல் சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஹேக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கோவிட் பரவல் காரணமாக சிறைக் கைதிகளை பார்வையிடும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மதுபானசாலை...

களும் இன்று மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில், இன்று சட்ட விரோதமாக மதுபான விற்பனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1140
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 7 7 5 0 7 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0891
வெற்றி இலக்கங்கள்
W 02 26 53 64 66

மஹஜன சம்பத
திகதி 2021/10/02
சீட்டிழுப்பு இலக்கம் 4543
T 4 0 7 5 5 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 02.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2838
வெற்றி இலக்கங்கள்
E 02 11 65 73
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.10.02
சீட்டிழுப்பு இலக்கம் - 573
X 10 25 30 48

## இராணுவத்...

தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் சாரா ஜோன்ஸ் உடன் இராஜதந்திர சந்திப்பு ஒன்று மனித உரிமை செயற்பாட்டாளரும் சட்ட ஆலோசகருமான கீத் குலசேகரம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

செயற்பாட்டாளரான விஜய் விவேகானந்தனால் ஒருங்கமைக்கப்பட்டிருந்த மேற்படி மெய்நிகர் வழி(Zoom) சந்திப்பில் யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டத்தின் (ITJP) இயக்குநரான பிரான்சிஸ் ஹரிசன், இனப்படுகொலையை சர்வதேச நீதிமன்றிற்கு எடுத்துச்செல்லும் வழக்குகளை முன்னெடுத்துவரும் மூத்த வழக்கறிஞர் அருண் கணநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களும் இணைந்திருந்தனர்.

இந்நிலையில், இந்த சந்திப்பின்போது இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் 1,40,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் காயமுற்றதுடன் பலர் இடம்பெயர்ந்தபோது 58 ஆவது படைப்பிரிவிற்கு தலைமை தாங்கி இராணுவத்தை நேரடியாக வழிநடத்திய சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக் குற்றவாளிகளை தடை செய்ய பிரித்தானிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைவரும் முன்வைத்த கருத்துக்களை உள்வாங்கிய பாராளுமன்ற உறுப்பினர், தமிழ் மக்கள் சார்பாக பிரித்தானிய உள்துறை அமைச்சகத்துக்கு அழுத்தம் கொடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

மேற்படி சந்திப்பில் நாடுகடந்த அரசின் செயற்பாட்டாளர்களான விதுரா விவேகானந்தன், பிரசன்னா பாலச்சந்திரன், ஜனகன் கணேஷ், ஜஸ்டன் நவரட்ணம், சுஜீவன் ஆனந்தராசா மற்றும் சிதம்பரசுப்ரமணியன் திருச்செந்திநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-3)

## மன்னாரில்...

நம் காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மன்னார் எருக்கலம்பிட்டி தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான ரம்ஸான் (வயது-29) என தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை மன்னார் பொலிஸார் கைது செய்திருந்தனர். இதில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

குறித்த நபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருக்க முடியும் என உறவினர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர். (ம-3,285)

## விபரீத...

குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலிவடக்கு, செட்டியார்மடம் பகுதியில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இதில் இரியதாஸ் மொஹமட் இம்ரான் (வயது-33) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார். (ம-3,104)

## வாள்களுடன்...

ஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் நேற்று இரவு வீடு ஒன்றில் இருந்து வாள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியானது சுற்றி வளைக்கப்பட்டது. (ம-3,104)

## இம்மாத...

பிக்கப்படும். சரியான சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப மாணவர்களுக்கான பாதுகாப்பான சூழல் உருவாக்கப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார். (ம-3)

## பேருந்து மோதி...

அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அதன்பின்னர், தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-3,18,33)

## மதவாதங்களை...

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் பௌத்த விகாரை அமைக்கப்படவுள்ளதாக ஊடகங்களில் வந்த செய்திதொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஸ்ரீ விமல தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகம் ஒன்றில் ஆரியகுள அபிவிருத்தி சம்பந்தமாகவும் அதில் புத்த விகாரை அமைக்க முயற்சி என்ற செய்தியினைப் பார்த்தேன் அந்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை.

நாக விகாரைக்கு அண்மையில் சுற்றுலா மையத்தினை அமைப்பது தொடர்பில் எனது அதிருப்தியை வெளியிட்டிருக்கின்றேன்.

குறித்த அபிவிருத்தி தொடர்பில் எம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை. இது ஒரு புனித பூமி. சுற்றுலா ஹோட்டலை குளத்தின் நடுவில் அமைப்பதை நிறுத்தி இந்து மற்றும் ஏனைய மதத்தவர்கள் ஒன்றிணைந்து செயற்படக்கூடியவாறு ஒரு நல்லிணக்க மண்டபம் ஒன்றை அமைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால் ஊடகங்களில் புத்தர் சிலை அமைக்கப் போகின்றோம் என செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். நாங்கள் அவ்வாறு ஒன்றும் செய்வதற்கு எண்ணவில்லை. ஒரு தியான மண்டபமாக மாற்றுவதற்கு தான் யோசித்துள்ளோம்.

புனித பிரதேசம் என்பதால் குளத்தின் நடுவில் ஒரு தியான மண்டபத்தை அமைத்தால் அது அனைத்து மதத்தினருக்கும் உதவியாக இருக்குமென்பது எமது நிலைப்பாடு. இந்து மதமும் பௌத்த மதமும் சர்வமதகுழுவாக இணைந்து யாழில் ஒற்றுமையாக செயற்பட்டு வருகின்றோம்

சிலர் தமது அரசியல் தேவைகளுக்காக மதவாதங்களை தூண்டி மக்களை குழப்பிவிட யோசிக்கிறார்கள். மக்களை தூண்டிவிடுகிறார்கள்.

எனவே இதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நாங்கள் இந்த நாட்டில் நல்லிணக்கத்தோடு சமாதானமாக வாழ அனைவரும் முயற்சிக்கின்றோம். என்றார். (ம-3,33)

## யாழில் உயிரி...

பெயர் வயது விபரங்கள் தெரியாத மேலும் ஒருவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது. (ம-3,33)

## சேதன...

சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற உரங்களை ஒருபோதும் இறக்குமதி செய்யமாட்டோம் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

விவசாயத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதன பசளையின் மாதிரிகளில் மண் வளத்திற்கும் காலநிலைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் உள்ளடங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சீன நிறுவனம் வருத்தம் வெளியிட்டுள்ளதுடன், இறக்குமதி செய்யப்பட்ட சேதன பசளை மாதிரிகளை மீளப் பெற்றுக்கொண்டுள்ளது என்றார். (ம-3)

## கூட்டமைப்பின்...

யானதாகும். மக்கள் மத்தியில் ஒரு தெளிவு இருக்க வேண்டும் மாறாக அவர்களைக் குழப்பக்கூடாது."

இவ்வாறு அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் எழுந்துள்ளன எனவும், இதையடுத்துக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மூவரும் கடந்த புதன்கிழமை கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச்சு நடத்தியுள்ளனர் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இதைத் தெளிவுபடுத்தும் வகையில் சம்பந்தன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## யாழில் அரச...

யாற்றி வரும் கோவிந்தராசா நிதர்சன் (வயது-31) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

குறித்த அரச ஊழியர் அண்மையில் திருமணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

தேவை
அல்போன்ஸ் மாம்பழம்,
விளாட் மாம்பழம்,
சுண்டங்காய் என்பன
மொத்தமாகத் தேவை
(C-2741)
தொடர்பு:-
074 116 1955

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில் ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500m தூரத்தில் 20 அடி பாதையுடன் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
இரண்டு பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
(யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2km தூரம்)
(8110)
076 221 2037, 077 288 0152, 076 734 1023

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- அச்சுவேலி
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2744)

0768226240 DHL

## காணி விற்பனைக்கு

தையிட்டியில் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள மூன்று பக்கமும் பாதை (ஒழுங்கை) உள்ள 26 பரப்புக் காணியும் இரண்டு பக்கம் பாதையுள்ள 6 2/3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 329 2259** (8102)

## சோ(f)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (8101)

**077 224 2787**

## அமெரிக்கா செல்ல

பாஸ்போர்ட் எடுத்து விட்டீர்களா?

விளையாட்டு அல்ல இது உண்மை

**அமெரிக்க அதிஸ்ட விசா**

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள் (C-2745)

**இலவச வாய்ப்பை** தவறவிடுவானேன்?

எல்லோருக்கும் வெளிநாடு செல்ல வசதி இருக்காது ஆனால் 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் இந்த இலவச வாய்ப்பை பயன்படுத்தலாம்.

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்

பாஸ்போட் இல்லாமல் விண்ணப்பிக்க முடியாது

பதிவுகள் ஆரம்பம் - 07-10-2021

உடனடியாக கொழும்பு சென்று One Day Pass Port எடுங்கள்

**V2 Travels** 0768226244
0768226237 / 0768226240

## வீடு விற்பனைக்கு

யாழ். செம்மணி வீதி, நாயன்மார்கட்டில் 2 1/2 பரப்பு வருமானம் தரக்கூடிய காணியில் 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
[ தரகர்கள் தேவையில்லை. ] (8093)

**077 177 3789**
**075 983 3290**

## கனடா-STUDENT VISA

A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2744)

IELTS இலவசமாக கற்பிக்கப்படும்

VISA APPLICATION

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**0777-068-777**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம். 1963.02.04 மிருக சீரிட நட்சத்திரம். கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு:-

**16474720358** (8097)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம். 1969.10.29 அச்சுவினி நட்சத்திரம். கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு:-

**+18197448588** (8096)

## பணியாளர்கள் தேவை

**வடிவமைப்பாளர்** ஆண்/பெண்
**வரவேற்பாளர்** பெண்

அனுபவம் உள்ளவர்கள், அடிப்படை கணனி அறிவு உள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

SMART DIGITAL PRINTING

#255, Stanley Road, Jaffna.
Tel : 021 221 2958, Mob: 0774724075
e.mail : smartjaffna@gmail.com (8101)

## IELTS

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகவும்

யாழ் ஆங்கிலக்கல்வியில் No.1 பயிற்சி மையம்

**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**

புதிய பிரிவு ஆரம்பம் 4/10/2021 Mon to Fri 8 am ZOOM Online (8223)

German - Germany Swiss நாடுகளுக்கு செல்வோருக்கு Deutsch
French - France நாட்டிற்கு செல்வோருக்கு

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.113, ... 0777 24 07 07 021 222 4003

021 226 2470 0777577333 | 021 227 0775 0777227074 | 021 224 3970 0776033303 | 021 225 6466 0761354503 | 021 228 5455 0776398006

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வீட்டு உதவியாளர் தேவை

வீட்டில் தங்கிநின்று வீட்டு உதவிகள் செய்யக் கூடிய மற்றும் இரண்டு வயது குழந்தையை பராமரிக்கக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (8107)

**077 700 2552**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ( நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் )
பரப்பு 6 இலட்சம்
**பார்வையிடும் நேரம்** : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
[ தரகர் தேவையில்லை. ] (8103)

**077 814 7389 | 077 614 7333**

## வாகனங்கள் வாடகைக்கு தேவை

வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு டிப்பர்கள் தேவை.
3 கியூப் டிப்பருக்கு 1Km இற்கு - 90/=
5 கியூப் டிப்பருக்கு 1 Km இற்கு - 145/=
**குறிப்பு :** பொருட்கள் இறக்கியவுடன் அதற்குரிய பணம் உடன் வழங்கப்படும்.
பதிவுகளுக்கு வாகனப் புத்தகம், வாகன உரிமையாளர் NIC, சாரதியின் வாகன அனுமதிப் பத்திரம் ஆகிய பிரதிகள் தேவை.
(மறைமுகக் கட்டணங்கள் வசூலிக்கப்படாது.) (8106)

**076 132 1984**

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் பிரதான வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்பு காணியில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

**விலை** - ஒரு கோடி எண்பது இலட்சம்
( பேசித் தீர்மானிக்கலாம்.) (8101)

**077 655 7620**
**077 720 2494**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH


- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

**OXFORD ENGLISH ACADEMY,**
**Ariyakulam junction, Jaffna.**

TP : 077 780 3970, 074 007 1970 (7692)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



எமையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## சிவசம்பு சுப்பிரமணியம்

*திதி :- துவாதசி*

எமது குடும்பத் தலைவரின் மறைவையொட்டி நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி, முகப்புத்தகம், மின்னஞ்சல் போன்ற சமூகவலைத் தளங்கள் ஊடாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித் தவர்களுக்கும் பதாதைகள், மலர்வளையம், மலர்மாலைகள் சாற்றியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சகல நிகழ்வுகளிலும் எம்முடன் கைகோர்த்து இன்றுவரை எமக்கு சகல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (8095)

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.10.2021) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

கண்ணித்தோட்டம், சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

077 711 0027, 077 438 2468, 076 840 7690

தகவல், குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.5,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.